# உதயன்

விலை ரூபா 7.00

கடர்:17 வள்ளுவர் ஆண்டு 2033 மாசி 10 வெள்ளிக்கிழமை (22-02-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:89


## விசேட ஹெலியில் வெஸ்பேர்க் கிளிநொச்சி சென்று திரும்பினார்!

வவுனியா,பெப்.22

இலங்கைக்கான நோர்வே தூதர் ஜோன் வெஸ்பேர்க் நேற்றுப் பிற்பகல் கொழும்பில் இருந்து அவசரமாகப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள கிளிநொச்சிப் பகுதிக்குச்சென்று திரும்பினார்.

அங்கு அவர் விடுதலைப் புலிகளின் அரசியற்றுறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசினார் என்று 'புலிகளின் குரல்' வானொலி அறிவித்தது.

விமானப் படையின் 'பெல்' ரகக ஹெலிகொப்டர் மூலம் நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் தூதர் வெஸ்பேர்க் கிளிநொச்சியைச் சென்றடைந்தார்.

வெஸ்பேர்க்குடன் அவரது துணைவியாரும் உடன் சென்றிருந்தார்.

அங்கு அவர்களை விடுதலைப் புலிகளின் பிரமுகர்களான புலித்தேவன், தங்கன் ஆகியோர் வரவேற்று அழைத்துச் சென்றனர்.

பிற்பகல் 3 மணிக்கு கிளிநொச்சியில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் அரசியற்றுறை நடுவப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் இன்று பிரதமர் படையினருக்கு விசேட உரை

கொழும்பு,பெப்.22

இன்று வவுனியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அங்கு படையினருக்கான விசேட உரை ஒன்றை ஆற்றவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளுடன் நிரந்தர யுத்தநிறுத்தத்துக்கு உடன்பட்டுள்ள நிலையில் நாட்டின் பாதுகாப்புப் படையினர் மத்தியில் பிரதமர் ஆற்றவுள்ள இந்த விசேட உரை முக்கியத்துவம் வாய்ந்ததாக நோக்கப்படுகின்றது.

பிரதமரின் வவுனியா விஜயத்தை ஒட்டி செய்தியாளர்களும், படப்பிடிப்பாளர்களும் கொழும்பில் இருந்து வவுனியாவுக்குப் படையெடுத்துச் சென்றிருக்கின்றனர்.

வவுனியா இராணுவத் தலைமையகத்தில் இன்று இடம்பெறும் மாநாட்டில் கலந்துகொள்ளும் பிரதமர் அங்கு

(12ஆம் பக்கம் பார்க்க)

## வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த

# போர் நிறுத்த உடன்படிக்கையில் ரணில் - பிரபா நேற்று கைச்சாத்து!



## உத்தியோகபூர்வ அறிவிப்பு ஒஸ்லோவில் இருந்து வரும்



கொழும்பு,பெப்ரவரி22

**நிரந்தரப் போர்நிறுத்தத்துக்கான புரிந்துணர்வு உடன்படிக்கையில் அரசுத் தரப்பினரும் விடுதலைப் புலிகளும் நேற்று கைச்சாத்திட்டிருக்கின்றனர்.**

**பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கொழும்பிலும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் வன்னியிலும் உடன்படிக்கையின் மூலப் பிரதிகளில் ஒப்பமிட்டனர்.**

**நிரந்தரப் போர்நிறுத்தப் பிரகடனம் ஓரிரு தினங்களில் ஒஸ்லோவில் இருந்து முறைப்படி வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.**

வன்னியில் புலிகளின் தலைவர் பிரபாகரன் ஒப்பமிட்ட உடன்படிக்கையின் பிரதி நேற்று கிளிநொச்சிக்குச் சென்ற நோர்வேத் தூதர் வெஸ்பேர்க் ஊடாக நோர்வே அரசுக்கு அனுப்பப்பட்டிருப்பதாகவும் -

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கைச்சாத்திட்ட பிரதி இன்று நோர்வேக்கு அனுப்பப்படவிருப்பதாகவும் - தெரிவிக்கப்படுகிறது.

இரண்டு பிரதிகளும் கைக்கு எட்டியதும் நோர்வே அரசு போர்நிறுத்தப் பிரகடனத்தை ஒஸ்லோவில் இருந்து அறிவிக்கும்.

இந்தத் தகவல்களை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே நேற்றுப் பத்திரிகை ஆசிரியர்கள் சந்திப்பு ஒன்றில் தெரிவித்தார்.

பத்திரிகை ஆசிரியர்களைச் சந்திக்க முன்னர், ஜனாதிபதியிடம் சென்று போர்நிறுத்த உடன்படிக்கைப் பிரதி ஒன்றை அவரிடம் கையளித்து, வேண்டிய விளக்கங்களையும் அளித்தார் பிரதமர்.

ஜனாதிபதி என்ன சொன்னார் என்பதை பிரதமர் தெரிவிக்கவில்லை.

பத்திரிகை ஆசிரியர்களிடம் போர்

(12ஆம் பக்கம் பார்க்க)

### தாக்குதல் குறித்து பிரதமருக்கு அவசர தகவல்

கொழும்பு,பெப்.22

முல்லைத்தீவு சாலைப் பகுதியில் பொதுமக்கள் குடியிருப்புக்கள் மீது நேற்று மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதல் பிரதமரின் அவசர பணிப்பின் பேரில் நிறுத்தப்பட்டது என்று இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் தெரிவித்தார்.

முல்லைத்தீவுக் கடற்பகுதியில் இடம்பெற்ற மோதலை அடுத்து கரையோரக் கிராமங்கள் மீது விமானப் படை விமானங்கள் குண்டுத் தாக்குதலை நடத்தின. பொதுமக்கள் குடியிருப்புக்கள் மீதும் தாக்குதல் இடம்

(12ஆம் பக்கம் பார்க்க)

### முல்லைக் கடற்சமரில் 3 கடற்படையினர் பலி!

கொழும்பு,பெப்.22

முல்லைத்தீவு கடற்பரப்பில் சாலைப் பகுதியில் நேற்றுக்காலை 9மணியளவில் கடற்படையினருக்கும் கடற்புலிகளுக்கும் இடையில் நடந்த கடற்சமரில் ஓர் அதிகாரி உட்பட 3 கடற்படையினர் உயிரிழந்தனர்; நான்கு கடற்படையினர் காயமடைந்தனர். முல்லைத்தீவுக் கடற்சமர் தொடர்பாக விசேட ஊடகத் தகவல நிலையம் கள நிலைவர அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

முல்லைத்தீவுக் கரையிலிருந்து 25 கடல் மைல்கள் தொலைவில்

(12ஆம் பக்கம் பார்க்க)

### வெளிநாட்டு அவதானிகள் குழு திங்களன்று வரும்!

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான நிரந்தர யுத்தநிறுத்தத்தைக் கண்காணிக்கவுள்ள ஸ்கன்டிநேவியன் அவதானிகள் குழுவின் முதலாவது அணியினர் எதிர்வரும் திங்களன்று கொழும்பு வரவுள்ளனர்.

அரச வட்டாரங்களை ஆதாரம் காட்டி இணையச் செய்தி நிறுவனம் ஒன்று இத்தகவலை நேற்று வெளியிட்டது.

இருதரப்பு யுத்தநிறுத்தத்தைக் கண்காணித்து நோர்வே அரசுக்கு அறிவிப்பது இக்குழுவின் பணியாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

## கடற் சமரைத் தொடர்ந்து கிராமங்கள் மீது குண்டுவீச்சு!

### 5பேர் காயம்; மக்கள் இடம்பெயர்வு

வவுனியா,பெப்.22

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் நேற்று இடம்பெற்ற மோதல் சம்பவத்தைத் தொடர்ந்து அப்பிரதேசக் கரையோரக் கிராமங்கள் மீது ஸ்ரீலங்கா விமானப்படை விமானங்கள் குண்டு வீசித் தாக்கியதாக விடுதலைப் புலிகள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக 'புலிகளின் குரல்' வானொலியில் தெரிவிக்கப்பட்டதாவது:-

முல்லைத்தீவுக்கரையில் இருந்து 12 கடல் மைல்கள் தொலைவில் விடுதலைப் புலிகளின் இரு படகுகள் பயிற்சி நடவடிக்கைகளில் நேற்று ஈடுபட்டிருந்தன. முற்பகல் 9 மணிக்கு இந்தப் படகுகளை அவதானித்த ஸ்ரீலங்கா கடற்படையின் 'டோரா' படகுகள், புலிகளின் படகுகளை நோக்கி வந்தன. அந்தச் சமயத்தில் தமது படகுகளில் விடுதலைப் புலிகளின் கொடிகளை ஏற்றி படகில் இருந்த போராளிகள் தம்மை அடையாளம்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## உடன்பாட்டின் இறுதி வடிவத்தை புலிகளின் தலைமைப்பீடம் ஏற்றது!

### அன்ரன் பாலசிங்கம் அறிவிப்பு

லண்டன்,பெப்.22

தமிழீழ விடுதலைப் புலிகளும், அரசுத் தரப்பும் சமர்ப்பித்த யோசனைகள் மற்றும் திருத்தங்களின் அடிப்படையில் நோர்வே அரசு தயாரித்த யுத்தநிறுத்த உடன்பாட்டின் இறுதி வடிவத்தை விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் ஏற்றுக்கொண்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் நேற்று இத்தகவலை வெளியிட்டார்.

விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா அரசாங்கத்திற்கும் மத்தியில் எழுந்த முரண் நிலைகளைக் களைந்து - சிக்கல்களைத் தீர்த்து - இரு தரப்பினருக்கும் ஏற்புடையதான ஓர் அமைதி உடன்பாட்டை ஏற்படுத்தித் தந்தமைக்காக நோர்வே அரசாங்கத்தை பாலசிங்கம் பாராட்டினார்.

"இரு தரப்பு தலைமைகளும் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டதும் ஒரு நிலையான - நிரந்தரமான - போர்நிறுத்தமும், அதனைச் செம்மை



(11ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# நாளையும் நாளைமறுதினமும் நடக்கும் சமாதான பாதயாத்திரையில் அணி திரளுமாறு அழைப்பு!

யாழ்ப்பாணம்,பெப்ரவரி22

**சமாதான முயற்சிகள் வெற்றிபெற்று நாட்டில் நிலையான சமாதான சூழல் ஏற்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி குடாநாட்டில் நாளையும், நாளை மறுதினமும் நடத்தப்பட இருக்கும் பிரமாண்டமான சமாதானப் பேரணியில் அணி திரண்டு வந்து பங்கேற்குமாறு பொதுமக்களுக்கு அழைப்பு விடுக் கப்பட்டிருக்கிறது.**

**சமாதான யாத்திரைக்கான ஏற்பாட்டைச் செய்துள்ள மனிதநேய அமைப் புக்களின் ஒன்றியமும் குடாநாட்டில் உள்ள பல பொது அமைப்புகளும் இது தொடர்பான அழைப்பை பொதுமக்களிடம் விடுத்திருக்கின்றன.**

சமாதான முயற்சிகளுக்கு வலுச சேர்க்கும் இந்த மக்கள் பேரணிக்கு பொதுமக்களும் பொது அமைப்புக ளைச் சார்ந்தோரும் வேறுபாடுகளை மறந்து பூரண ஆதரவை வழங்க வேண்டும் என்று யாழ்.மாவட்ட மனித நேய அமைப்புக்களின் ஒன்றியம் கேட்டிருக்கிறது.

நாளை காலை 9 மணிக்கு ஊர் காவற்றுறை சின்ன மடுமாதா ஆலயத் தில் இருந்து ஆரம்பமாகவுள்ள பாத யாத்திரை ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில் தெல்லிப்பழை துர்க் கையம்மன் ஆலயத்தில் நிறைவுபெற வுள்ளது.

பாதயாத்திரை ஆரம்பிக்கும் நேர மான நாளை காலை 9 மணிக்கு சகல மக்களையும் 2 நிமிடம் சமா தானத்துக்காகப் பிரார்த்திக்குமாறும் சகல கோயில்கள், தேவாலயங்கள் மற்றும் வழிபாட்டுத் தலங்களில் மணி ஓசை எழும்புமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது.

இதேவேளை - நாளை காலை 7.30 மணிக்கு கோட்டை முனியப்பர் ஆலயத்தில் இருந்து சின்ன மடு மாதா ஆலயத்துக்கு மக்கள் செல் வதற்கென விசேட போக்குவரத்து வசதிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள் ளன. குடாநாட்டின் சகல பகுதிக ளில் இருந்தும் மக்கள் பாதயாத் திரையில் கலந்துகொள்ள வருகை தருவதற்கும் மீண்டும் தமது இடங் களுக்கு திரும்பிச் செல்வதற்கும் போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன.

முனியப்பர் ஆலயப் பகுதிக்கு வருகின்ற மக்களின் சைக்கிள்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களை அங்கேயே பாதுகாப்பாக நிறுத்தி வைக்க தரிப்பிட வசதிகளும் மேற் கொள்ளப்படவுள்ளதாக ஒன்றியப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை -

நாளையும், மறுநாள் ஞாயிற்றுக் கிழமையும் இடம்பெறவுள்ள சமாதா னப் பாதயாத்திரைக்கான பேரணி யில் ஒன்று வடமராட்சிப் பகுதியில் இருந்தும் ஆரம்பமாகவுள்ளது.

நாளை காலை 9 மணிக்கு வட மராட்சி, புனித லூர்து மாதா ஆலயத் தில் இருந்து பாதயாத்திரை புறப் படும். அந்த யாத்திரை மாலுசந்தி, வதிரிச்சந்தி ஊடாக நெல்லியடிச் சந்தியை அடைந்து புறாப்பொறுக்கி மூத்த விநாயகர் கோயிலடியில் மாலை நிறைவுபெறும்.

மீண்டும் நாளை மறுதினம் அங் கிருந்து புறப்பட்டு நல்லூர் கந்த சுவாமி கோயிலடிக்கு வந்து அங்கு பிரதான பாதயாத்திரை அணியுடன் இணைந்து கொள்ளும். அங்கிருந்து பின்னர் பாதயாத்திரை தெல்லிப் பழை துர்க்கையம்மன் ஆலயத்தைச சென்றடையும். (ஐ-8-10)

## இரு வழக்குகளிலும் இருந்து மாணவன் மணிவண்ணன் விடுவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.22

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி மாணவன் செல்வராசா மணிவண்ண னுக்கு எதிராகத் தொடரப்பட்ட இரு வழக்குகளிலும் இருந்து அவரை யாழ்.மேல் நீதிமன்றம் நேற்று விடு வித்தது.

விடுதலைப் புலிகளின் நடமாட் டம் பற்றித் தகவல் தெரிந்தும் அது பற்றித் தெரிவிக்கத் தவறியமை -

புலிகள் இயக்கத்துக்கு ஆள் களை சேர்க்க உதவியமை -

துப்பாக்கி, கைக்குண்டு அடங்கிய பொதியை வைத்திருந்தமை உட்பட குற்றச்சாட்டுக்களின் பேரில் இரண்டு வழக்குகள் அவர் மீது தொடரப் பட்டிருந்தன.

இந்த வழக்குகளிலும் புலிகளின் நடமாட்டம் பற்றிய தகவலை வழங் கத் தவறியமை தொடர்பான குற்றச் சாட்டு சட்டமா அதிபரின் உத்தரவுப் படி வாபஸ் பெறப்பட்டிருந்தது.

ஏனைய வழக்கு மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி.வரதராஜா முன்னிலை யில் நேற்று எடுக்கப்பட்டது.

துப்பாக்கி மற்றும் கைக்குண்டு கள் அடங்கிய பொதியை வைத்திருந்த தாக குற்றஞ்சாட்டப்பட்ட இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட சமயம் சந்தேக நபரின் வாக்கு மூலத் தைப் பதிவு செய்த உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் ஏ.ஆர்.வைத்தியலங் கார அங்கு சமுகமளித்திருக்க வில்லை.

மகளிர் விவகார மாநாடு ஒன்றில் பங்குபற்றுவதற்காக அவர் சென்றி ருப்பதாக நீதிபதியிடம் தெரிவிக்கப் பட்டது.

ஏற்கனவே மூன்று தடவைகள் இந்த வழக்கு ஒத்திவைக்கப்பட்டிருந் தது. இறுதித்தவணையாக இந்த வழக்கின் முக்கிய சாட்சியான வைத் தியலங்காரவை இன்று சமுகமளிக் கும்படி உத்தரவிடப்பட்டிருந்தது. ஆனால் அவர் வரவில்லை. மகளிர் விழாவா ஒரு மனிதனின் வாழ்க்கையா முக்கியம் என்று கேள்வி எழுப்பிய நீதிபதி வழக்கைத் தள்ளுபடி செய் தார்.

இந்த வழக்குகளில் எதிரி சார் பில் சட்டத்தரணி பா.தவபாலனும் அரச தரப்பில் சட்டத்தரணி எஸ்.கணேச ராசாவும் ஆஜராகி இருந்தனர்.

இதேவேளை -

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத் தின் கீழ் கோப்பாய் தெற்கைச் சேர்ந்த சிதம்பரம் அருணன் என் பவர் மீதும் ஓட்டுமடத்தைச் சேர்ந்த கணேசு செல்வகுமார் என்பவர் மீதும் தொடரப்பட்ட வழக்குகளை அரச சட் டத் தரணி எஸ். கணேசராசா வாபஸ பெற்றதை அடுத்து நீதிபதி அந்த இரு வரையும் விடுதலை செய்தார். (ஐ-3-6)

## திவ்வியன் மீதான ஒரு வழக்கு வாபஸ்!

யாழ்ப்பாணம்,பெப்.22

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீட இறுதிவருட மாணவன் கிருஷ்ண சாமி திவ்வியன் மீது பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் 5ஆவது பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு அரச தரப்பு சட்டத்தரணியால் நேற்று யாழ்.மேல் நீதிமன்றில் வாபஸ் பெறப்பட்டது.

திவ்வியனுக்கு எதிராக யாழ். மேல்நீதிமன்றில் பொலீஸாரால் மூன்று வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டி ருந்தன. அவற்றில் ஒரு வழக்கை வாபஸ் பெறுவதாக அரச சட்டத்தரணி நீதிபதிக்கு வேண்டுகோள் விடுத் ததைத் தொடர்ந்து அந்த வழக்கில் இருந்து திவ்வியனை விடுதலை செய்த நீதிபதி, அவர் மீது மேலும் இரு வழக்கு விசாரணைகள் இருப்ப தால் எதிர்வரும் மார்ச் மாதம் 15ஆம திகதி வரை அவரைத் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு உத் தரவிட்டார்.

இதேவேளை -

திவ்வியன் கைதான சம்பவத் தைத் தொடர்ந்து கைது செய்யப் பட்ட மகேந்திரநாதன் சங்கர் மீதும் பொலீஸாரால் இரண்டு வழக்குகள் யாழ்.மேல் நீதிமன்றில் தாக்கல் செய் யப்பட்டிருந்தன.

அவற்றில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் 5ஆவது பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை அரச சட்டத்தரணி வாபஸ் பெற்றார். ஆயி னும் அவர் மீது மேலும் ஒரு வழக்கு விசாரணை இருப்பதால் அவரை எதிர் வரும் மார்ச் மாதம் 15ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கு மாறு நீதிபதி உத்தரவிட்டார். (ஐ-6)

## யாழ்.மாவட்ட கராத்தே சங்க கூட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.22

யாழ். மாவட்ட கராத்தே சங்கத் தின் கூட்டம் எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். மாவட்ட செயலக விளையாட் டுத்துறை பணிமனையில் இடம் பெறவுள்ளது. (ஒ-3)

## கைது

யாழ்ப்பாணம்,பெப்.22

கொடிகாமத்தில் படையினரின் இராணுவ முகாமை அண்டிய பகுதி யில் சந்தேகத்துக்கிடமானமுறையில் நடமாடிய ஒருவரை கொடிகாமம் படை யினர் நேற்றுமுன்தினம் கைது செய் துள்ளனர்.

படையினரின் முகாம் பாதுகாப்பு வேலியைத் தாண்டிபோதே இவர் கைது செய்யப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

படையினர் சந்தேக நபரை கொடி காமம் பொலீஸாரிடம் ஒப்படைத்துள் ளனர். (ஐ-8)

## தேர்தல் திருத்த சட்டமூலம் நிறைவேறியது

கொழும்பு,பெப்.22

நியமனப்பத்திரங்கள் கோரப்பட்ட பின்னரும் கூட தேர்தலை ஒத்திவைப் பதற்கான அதிகாரத்தைத் தேர்தல் ஆணையாளருக்கு வழங்கும் உள்ளூ ராட்சி தேர்தல் திருத்த சட்டமூலம் 54மேலதிக வாக்குகளால் நேற்று நாடாளுமன்றத்தில் நிறைவேறியது.

இந்தச் சட்டமூலத்துக்கு ஆதர வாக 122வாக்குகளும் எதிராக 68 வாக்குகளும் கிடைத்தன.

தமிழ் கட்சிகளின் கூட்டமைப்பு, ஈ.பி.டி.பி., புளொட் ஆகிய கட்சிகள் சட்டமூலத்துக்கு ஆதரவாக வாக் களித்தன. ஜே.வி.பி.எதிராக வாக்களித தது.

இந்தச் சட்டமூலத்தின் கீழ் வடக்கு - கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல் ஒத்திவைக்கப்படலாம் என்று எதிர்பார்க் கப்படுகின்றது. (ஐ-3-10)

## புலிகளின் பகுதிக்கு மன்னாரிலிருந்து தபாற் பொதிகள்

மன்னார்,பெப்.22

மன்னார் தபால் நிலையத்தில் தேங்கிக் கிடந்த வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கான தபாற் பொதிகள் செஞ்சிலுவைச் சங்கசர்வ தேசக் குழுவின் உதவியுடன் அங்கு அனுப்பிவைக்கப்பட்டன.

மன்னார் - உயிலங்குளம் பாதை திறக்கப்பட்டதையடுத்து அப்பாதை வழியே இந்தத் தபாற்பொதிகள் அனுப பப்பட்டதாக மன்னார் தபால் அலுவ லக அத்தியட்சகர் பாலகிருஷ்ணன் தெரிவித்தார். (ஒ)

## கோதுமை மீதான பாதுகாப்பு வரி நீக்கம்
## மாவின் விலை 6 ரூபாவால் குறையும் என்கிறார் பீரிஸ்

கொழும்பு,பெப்.22

கோதுமைத் தானியம் மற்றும் கோதுமை மா ஆகியவற்றின் மீதான பாதுகாப்பு வரியை அரசு முற்றாக நீக்கியுள்ளது. அமைச்சரவை பேச் சாளரான அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் நேற்று இதனைத் தெரிவித்தார்.

கோதுமைத் தானியம் மற்றும் கோதுமை மா மீது அறவிடப்பட்டு வந்த 6.5 சதவீத பாதுகாப்பு வரி நீக்கப்பட்டிருப்பதால் கோதுமை மாவின விலை கிலோவுக்கு 6 ரூபா வரை குறைக்கப்படக் கூடும் என்றும் அவர் மேலும் கூறினார்.

அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவைக் குறைக்க அரசுமேற் கொண்டுள்ள புதிய நடவடிக்கை யின் ஒரு அங்கமாகவே கோதுமை மீதான பாதுகாப்பு வரி நீக்கப்பட்ட தாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ)

## சமாதானத்தை வலியுறுத்தி
## திருமலையில் ஞாயிறன்று பெரும் எழுச்சிப் பேரணி!

கொழும்பு,பெப்.22

சமாதானத்தை வலியுறுத்தும் மாபெரும் எழுச்சிப் பேரணி ஒன்று திருகோணமலையில் நடைபெறவுள் ளது.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மூன்று அணிகளாகப் புறப்படும் பேர ணிகள் திருமலை பெரிய முற்றவெளி யைச் சென்றடையும்.

திருகோணமலை மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்கள் இணைந்து இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள் ளன.

திருகோணமலை மாவட்டத்தின் மூவினங்களையும் சேர்ந்த பொது மக்கள், மதகுருமார்கள், மாணவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகி யோரும் மற்றும் அரச சார்பற்ற நிறு வனங்கள், தொழிற்சங்கங்களைச் சேர்ந்தோரும் இதில் பங்குகொள்ள வுள்ளனர்.

முற்றவெளியில் மதத்தலைவர் களின் பிரார்த்தனைக் கூட்டத்துடன் எழுச்சிப்பேரணி நிறைவுபெறும் என் றும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ள னர். (ஐ-8)

## கடற்சமரை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காட்டினர். ஆயினும் பீரங்கிகள் மற் றும் துப்பாக்கிகளைப் பயன்படுத்தி புலிகளின் படகுகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் படகில் இருந்த 7 போராளிகள் காயமடைந்தனர்.

இதற்கிடையில் -

கரையிலிருந்து விரைந்து சென்ற விடுதலைப் புலிகளின் தாக்குதல் அணியினர் கடற்படைப் படகுகள் மீது பதில் தாக்குதல் நடத்தினர்.

அப்போது நடந்த மோதலில் கப் டன் அறிவுமதி (கந்தசாமி தருணீஸ் வரன் - யாழ்ப்பாணம்) என்ற போராளி வீரச்சாவு அடைந்தார். மேலும் 6 பேர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவத்தை தொடர்ந்து ஸ்ரீலங்கா விமானப் படையின் 'கிபிர்' ரக விமானங்கள் சுண்டிக்குளம், மாத் தனை, பொக்கனை ஆகிய கரையோ ரக் கிராமங்களின் மீது குண்டுகளை வீசித் தாக்கின. கடலில் மீன்பிடித் துக் கொண்டிருந்த மீனவர்கள் மீது ஹெலிகளிலிருந்து துப்பாக்கிப் பிர யோகம் நடத்தப்பட்டது.

பலாலியைச் சேர்ந்த பாலசிங்கம் யோகேஸ்வரன் (வயது 19), ஆழிய வளை அக்கராயனைச் சேர்ந்த பால சிங்கம் கருணாநிதி, (வயது 18), அதே இடத்தைச் சேர்ந்த சுந்தரம் சிவகரன் (வயது 18), சிட்டுக் குடியிருப்பைச் சேர்ந்த கருணாநிதி நவநீதன் (வயது 18), யாழ்தாளையடி வடக்கைச் சேர்ந்த சிவபாலராஜா சிவகரன் (வயது 19) ஆகியோர் விமானக் குண்டு வீச்சி னால் காயமடைந்துள்ளனர்.

இவர்கள் இடம்பெயர்ந்து மாத்த ளன் கிராமத்தில் வசித்து வந்தவர் களாவர். குண்டு வீச்சு நடந்த பகுதி மக்கள் இடம்பெயர்ந்து தற்போது இரணைப் பாலை, புதுக்குடியிருப்பு ஆகிய பகுதி களில் தங்கியுள்ளனர்.

நேற்று முற்பகல் 9மணி முதல் பிற்பகல் 2 மணி வரை விமானப்படை யினரின் தானியங்கி உளவு விமா னம் முல்லைத்தீவு கரையோரப் பகுதி களில் வட்டமிட்டுக் கொண்டிருந்தது.

இவ்வாறு விடுதலைப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (ஐ-ஒ-10-8)


## கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்
## வருடாந்த பொதுக்கூட்ட அறிவித்தல்

*காலம்:* **17-03-2002 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி.**

*இடம்:* **கொக்குவில் இந்துக் கல்லூரி மண்டபம்**

★ பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு அழைக்கப்படுகின்றீர்கள்.

★ பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்புவோர் 08.03.2002 வெள்ளிக்கிழமைக்கு முன்பாகச் செயலாளரிடம் கையளித்தல் வேண்டும்.

★ பழைய மாணவர் சங்கத்தில் புதிதாக அங்கத்துவம் பெறவிரும்புவோர் செயலாளருடன் அல்லது கல்லூரி நிர் வாகத்துடன் தொடர்புகொண்டு விண்ணப்பிக்குமாறு கேட் கப்படுகின்றீர்கள்.

இ.செல்வநாதன்
*செயலாளர்.*

(C/20840)

# வாக்காளரைக் கவர பரிசு வழங்கும் திட்டம்

## தாய்லாந்தில் அறிமுகப்படுத்த முயற்சி

பாங்கொக்,பெப்.22

தேர்தல்களில் வாக்களிப்பதற்குச் செல்ல வாக்காளர்கள் ஆர்வம் காட்டாமல் இருந்து வருவதால் வாக்களிக்க வருவோருக்கு பரிசு வழங்கும் புதிய திட்டம் ஒன்றை தாய்லாந்தின் நாடாளுமன்றத் தலைவர் உதாய் பிம்சய்ச்சோன் வெளியிட்டுள்ளார்.

தாய்லாந்தில் அண்மைக் காலங்களில் நடந்த தேர்தல்களில் பெரும் எண்ணிக்கையான மக்கள் வாக்களிக்கவில்லை. தேர்தல்களில் அவர்கள் அதிக ஆர்வம் காட்டவில்லை என்பது ஆய்வுகள் மூலம் தெரியவந்தது.

இதனால் மக்களை வாக்களிக்கச் செய்வதற்காக தாய்லாந்து அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டது. அதற்காக பல லட்சக்கணக்கான பணத்தையும் அது செலவிட்டது.

ஆனால் அந்த நடவடிக்கைகளால் பயனேதும் ஏற்படவில்லை.

இதனை அடுத்தே வாக்காளர்களைக் கவர்வதற்கான பரிசுத் திட்டத்தை நாடாளுமன்றத் தலைவர் வெளியிட்டுள்ளார்.

தலைநகரில் இடம்பெற்ற கருத்தரங்கில் அவர் இதனைத் தெரிவித்தார்.

வாக்களிக்க வருபவர்களின் பெயர்கள் அனைத்தையும் திரட்டி அதிர்ஷடலாபச் சீட்டிழுப்பு மூலம் அவர்களில் மூவரைத் தேர்ந்தெடுத்து பரிசுகள் வழங்கலாம். முதல் பரிசாக ஒரு லட்சம் ரூபாவும் 2ஆவது பரிசாக 20 ஆயிரம் ரூபாவும் கொடுக்கலாம் என்றும் பிம்சய்ச்சோன் மேலும் சொன்னார். (ம)

# பலஸ்தீன வானொலி, தொலைக்காட்சி நிலையங்கள் மூடி 'சீல்' வைப்பு!

ஜெருசலேம்,பெப்.22

பலஸ்தீனர்கள் மீதான தனது இராணுவ அழுத்தத்தை இஸ்ரேல் அதிகரித்துள்ளது. பலஸ்தீன வானொலி மற்றும் தொலைக்காட்சி நிலையங்களை இஸ்ரேலியப் படையினர் நேற்று மூடி 'சீல்' வைத்தனர்.

காஸாவில் உள்ள பலஸ்தீன அகதி முகாம் ஒன்றில் இடம்பெற்ற மற்றொரு சம்பவத்தில் 5 பலஸ்தீனர்கள் இஸ்ரேலிய இராணுவத்தினரால் கொல்லப்பட்டனர்.

பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத்தின் தலைமையகம் மீது இரண்டாவது நாளாகவும் நேற்று இஸ்ரேலிய ஹெலிகள் தாக்குதல் நடத்தின.

தெற்கு காஸாவில் உள்ள கான் யூனிஸ் அகதிகள் முகாம் மீது இஸ்ரேலிய போர் விமானங்கள் நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் பலஸ்தீன

## உலக அரங்கில்

பாதுகாப்புப் படையினரின் கட்டடம் ஒன்று பலத்த சேதமடைந்தது.

றபாவில் உள்ள அகதி முகாம் பகுதியில் இஸ்ரேலிய டாங்கி ஒன்றுக்கும் பலஸ்தீன ஆயுததாரிகளுக்கும் இடையில் நடந்த துப்பாக்கிச் சண்டையில் 4 பலஸ்தீனர் கொல்லப்பட்டனர். மேலும் 25 பேர் காயமடைந்தனர். (ம)

## பிரிட்டிஷ் துருப்பினர் மீது ஆப்கானில் சூடு!

காபூல்,பெப்.22

காபூலில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த பிரிட்டிஷ் துருப்பினர் மீது இனந்தெரியாத சிலர் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளதாக காபூலில் உள்ள பிரிட்டிஷ் இராணுவப் பேச்சாளர் கூறினார்.

பதிலுக்கு பிரிட்டிஷ் துருப்பினரும் சுட்டனர் என்றும் அவர் தெரிவித்தார். ஆனால் எவருக்கும் உயிரிழப்போ காயங்களோ ஏற்படவில்லை.

ஆப்கானிஸ்தானில் அமைதிப் பணியில் ஈடுபட்டுவரும் சர்வதேசப் பாதுகாப்புப் படையில் அங்கம் வகிக்கும் பிரிட்டிஷ் துருப்பினர்மீது நடத்தப்பட்ட இரண்டாவது தாக்குதல் இதுவாகும்.

தாக்குதல் நடத்தியவர்கள் வாகனம் ஒன்றில் வந்து அப்பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த பிரிட்டிஷ் துருப்பினர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு தப்பியோடிவிட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். (ம)

## நேபாள ராணி பூரண குணமடைந்தார்


காத்மண்டு,பெப்.22

கடந்த ஆண்டு ஜூன் மாதம் நேபாள மன்னர் பிரேந்திரா குடும்பத்தினர் இளவரசர் திபேந்திராவினால் கூண்டோடு சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தில் படுகாயமடைந்த தற்போதைய மன்னர் ஜியானேந்திராவின் மனைவி ராணி கோமல் தற்போது முழு ஆரோக்கியத்துடன் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

படுகாயமடைந்த ராணி கோமல் காத்மண்டுவில் உள்ள இராணுவ ஆஸ்பத்திரியில் மூன்று வாரம் சிகிச்சை பெற்றார். அவரது குடல் மற்றும் எலும்புகளில் பெரும் காயங்கள் ஏற்பட்டிருந்தன. இதனால் அவர் லண்டனுக்குக் கொண்டு செல்லப்பட்டு சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார்.

தற்போது அவர் பூரண குணமடைந்து நாடு திரும்பியுள்ளார். மூன்று நாள்களுக்கு முன்னர் அவர் தனது 52 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடினார். (ம)

# எகிப்து ரயில் விபத்து!



ரயில் பெட்டியிலிருந்து எரிந்த நிலையில் சடலம் அகற்றப்படுகிறது


கெய்ரோ,பெப்.22

எகிப்தில் பயணிகள் ரயில் தீப்பிடித்ததில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 370 என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.ரயிலில் இருந்த சடலங்கள் அனைத்தும் அகற்றப்பட்ட பின்னர் அதிகாரிகள் இதனைத் தெரிவித்தனர்.

பயணி ஒருவர் உணவு சமைப்பதற்காகப் பற்றவைத்த காஸ் அடுப்பு வெடித்ததாலேயே இந்த விபத்து இடம்பெற்றதாகக் கூறப்பட்டது. இறந்தவர்களில் பலர் தீயில் கருகியே இறந்துள்ளனர் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

பலரது சடலங்கள் அடையாளம் காணமுடியாத அளவுக்கு தீயில் கருகியுள்ளன. விபத்தில் சிக்கிய ரயிலை எகிப்தியப் பிரதமர் சபா ஒபீட் நேற்றுமுன்தினம் நேரில் சென்று பார்வையிட்டார்.

விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு 650 டொலர்களும் காயமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு 222 டொலர்களும் உடனடி நிவாரணமாக வழங்கப்படும் என்று சமூக நலத்துறை அமைச்சர் அமினா அல் - ஹிண்டி தெரிவித்தார். (ம)



எரிந்த பின்னர் ரயில் பெட்டி ஒன்றின் தோற்றம்.

## ஜோர்ஜ் புஷ் சீனாவுக்கு விஜயம்

பெய்ஜிங்,பெப்.22

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ. புஷ் சீனாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

சீனப் பிரதமர் ஜியாங் செமினைச் சந்தித்து அவர் பேச்சு நடத்தினார்.

பின்னர் இருவரும் இணைந்து செய்தியாளர் மாநாடொன்றை நடத்தினர். பயங்கரவாதத்துக்கு எதிரான போரில சீனா செய்த உதவிகளுக்காக அதிபர் புஷ் அப்போது நன்றி தெரிவித்தார்.

மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு சீனா அதிக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். மதச் சுதந்திரத்தை பெய்ஜிங் அனுசரிக்க வேண்டும் என்று வாஷிங்ரன் விரும்புகின்றது என்றும் அவர் சொன்னார்.

கொம்யூனிச ஆட்சியின் கீழ் உள்ள சீனாவுக்கு கடந்த 30 ஆண்டுகளில் விஜயம் செய்யும் முதலாவது அமெ



சீனாவில் புஷ்ஷுக்கு வரவேற்பளிக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படம்.

ரிக்க அதிபர் புஷ் ஆவார்.

அந்த வகையில் புஷ்ஷின் இந்த விஜயம் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது.

"சீனாவின் எதிர்காலம் சீன மக்களின் தீர்மானத்துக்கே விடப்பட்டுள்ளது. ஆனால் எந்த நாட்டு அரசும் மனித கௌரவத்தை உதாசீனப்படுத்த முடியாது." - என்று புஷ் தெரிவித்தார்.

புஷ்ஷின் 'இந்த விஜயத்தின் போது பெரும் எண்ணிக்கையான ஜனநாயக விரும்பிகளும் பலுங் கொங் மதத்தைச் சேர்ந்தவர்களும் சீன அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பல நூற்றுக்கணக்கானவர்கள் பொலஸாரால் கைது செய்யப்பட்டனர்.

# பாக். இராணுவத்தைப் பார்த்து இந்தியா பயந்துவிட்டதாம்!

## அதிபர் பர்வேஷ் முஷாரப் கூறுகின்றார்!

இஸ்லாமாபாத்,பெப்.22

பாகிஸ்தான் இராணுவத்தைப் பார்த்து இந்தியா பயந்துவிட்டது. அதனால்தான் அவர்கள் எம்மீது தாக்குதல் எதனையும் தொடுக்கவில்லை.

- இவ்வாறு கூறியிருக்கிறார் பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ் முஷாரப். லாகூரில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் கூறியதாவது:-

எல்லையில் இருந்து இந்தியா தனது படைகளை விலக்கிக் கொள்ளாத வரை பாகிஸ்தானும் தனது படைகளை எல்லையிலிருந்து விலக்கிக் கொள்ளாது.



இந்தியாவுக்கு ஈடுகொடுக்கும் விதத்தில் எங்கள் படைகளை எல்லையில் தொடர்ந்து நீடிக்கச் செய்வதில் எங்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை.

நாட்டின் நலன்கருதி பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இதில் வெளிநாடுகளின் நெருக்கடிகளுக்கு இடமளிக்கப்படாது.

எதிர்வரும் மே அல்லது ஜூன் மாதத்தில் அமெரிக்காவின் உதவியுடன் இந்தியா - பாகிஸ்தான் எல்லையில் பதற்றம் குறைய வாய்ப்பு இருக்கிறது.

தீவிரவாதிகளுக்கு நான் ஆதரவு கொடுக்கவில்லை. அவர்களை ஒடுக்கும் விடயத்திலும் நான் அரைமனதுடன் செய்யவில்லை.

பாகிஸ்தானில் இராணுவச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் திட்டம் எதுவும் இல்லை. நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட அப்படி ஒரு நடவடிக்கை எடுத்தால் அது குறைந்த காலத்துக்கே பலனளிக்கும். அது வாபஸ் பெறப்பட்டதும் மீண்டும் சட்டம் ஒழுங்குப் பிரச்சினை உருவாகும்.

- இவ்வாறு அவர் மேலும் கூறினார். (ம)

## 'ஹாரிபாட்டர்' ஆங்கிலப்படம் வசூலில் சாதனை

லண்டன்,பெப்.22

"ஹாரிபாட்டர் அண்ட் திபிலாசபர்ஸ ஸ்டோன்ஸ்" என்ற ஆங்கிலப் படம் உலகம் முழுவதும் வசூலில் சாதனை படைத்துள்ளது.

இதுவரை இந்தப்படம் 4 ஆயிரத்து 300 கோடி இந்திய ரூபாய் வரையில் வசூலித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. தொடர்ந்தும் இப்படம் ஓடிக்கொண்டிருக்கின்றது.

இதுவரை 'டைட்டானிக்' படந்தான வசூலில் முன்னணி வகித்து வந்தது 'ஹாரிபாட்டர்' அந்தச் சாதனையை முறியடித்து விட்டது.

மந்திரவாதிச் சிறுவன் ஒருவனைப் பற்றியது இப்படம் ஜோன் கே.ரோலிங் என்ற எழுத்தாளர் எழுதிய கதையின் அடிப்படையில் இப்படம் எடுக்கப்பட்டுள்ளது. இந்தப் படம் 6 பகுதிகளாக வெளிவர இருக்கின்றது. இதன் இரண்டாவது பகுதியை எதிர்வரும் நவம்பர் மாதத்தில் வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளது. (ம)

## முல்லா ஓமரின் முன்னாள் ஆலோசகர் கைது!

காபூல்.பெப்.22

ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் ஆட்சி இடம்பெற்ற போது அவர்களின் பெரும் தலைவராக இருந்த முல்லா ஓமரின் முன்னாள் ஆலோசகர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

முல்லா முகமது ஜிம்கானி என்பவரே கைது செய்யப்பட்டவராவார்.

அமெரிக்கப்படையினரும் ஆப்கான் படையினரும் இணைந்து நடத்திய தேடுதலின் போது இவர் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவரிடம் தீவிர விசாரணைகளை நடத்துவதன் மூலம் முல்லா ஓமர் தற்போது எங்கிருக்கிறார் என்பது குறித்த தகவல் தெரியவரலாம் என்று அமெரிக்கப் படையினர் நம்புகின்றனர்.

ஓமர் ஆப்கானை விட்டு தப்பிவிட்டார் என்று முன்னர் தெரிவித்து வந்த அமெரிக்கா அவர் தற்போது ஆப்கானிலேயே மறைந்து வாழ்ந்து வருவதாகவும் தமது படையினர் அவரை தொடர்ந்து தேடிவருவதாகவும் கூறிவருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

### பயங்கரவாதத்துக்கு எதிரான போரில்

# ஆப்கான் வெற்றிக்குப் பின் அமெரிக்கா தனது நண்பர்களை மறந்துவிட்டது!

## குற்றஞ்சாட்டுகிறார் கோபச்சேவ்

மொஸ்கோ,பெப்.22

"ஆப்கானிஸ்தான் போரில் வெற்றி பெற்ற பின்னர் அமெரிக்கா தனது நண்பர்களைக் கைவிட்டுவிட்டது"- இவ்வாறு தெரிவித்துள்ளார் சோவியத் ஒன்றியத்தின் முன்னாள் ஜனாதிபதி மிகைல் கோபச்சேவ். ரஷ்ய செய்திநிறுவனமான 'இன்ரர் பக்ஸ்'க்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

"இந்தப் போரில் வெற்றிபெற தனக்கு உதவி செய்தவர்களையும் பயங்கரவாதத்துக்கு எதிராகச் செயற்படுவதற்கு ஒத்துழைத்தவர்களையும் அமெரிக்கா சடுதியாக மறந்துவிட்டது" - என்றார் கோபச்சேவ்.

பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் அமெரிக்க அரசியல்வாதிகள் நடந்துகொள்ளும் விதம் குறித்து இந்தப் பேட்டியில் கோபச்சேவ் கடுமையாக விமர்சனம் செய்தார்.

பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் அமெரிக்காவின் அடுத்த இலக்கு ஈராக் என்று அதிபர் புஷ் தெரிவித்த கருத்துக்கு ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் கண்டனம் தெரிவித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

"நான் நினைக்கின்றேன், எமது அமெரிக்க நண்பன் தனது ஏனைய நண்பர்கள் குறித்துக் கவனம் கொள்ளவில்லை என்று. காலம் எப்போது அமைதியற்றதாகும், மோசமானதாகும் என்று தெரியாது. ஆனால் அமெரிக்கா தனது கொள்கைகளை நேராக்கி வெற்றிபெறுவதற்கு முயல வேண்டும்" - என்று அந்தப் பேட்டியில் கோபச்சேவ் மேலும் தெரிவித்தார்.

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா மேற்கொண்ட இராணுவத் தாக்குதலுக்கு ரஷ்யா தனது முழுமையான ஆதரவை வழங்கியது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (ம)

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையின்

# விடைத்தாள் மதிப்பீட்டுப் பணி முதல் முறையாக யாழ்ப்பாணத்திலும்

## ஆணையாளர் அனுமதி

யாழ்ப்பாணம்,பெப்.22

எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையின் விடைத்தாள்களை மதிப்பீடு செய்யும் பணி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

பரீட்சை ஆணையாளர் இதற்கான அனுமதியை வழங்கியுள்ளார் என வடமாகாண அதிபர்கள் சங்கத் தலைவரும், யாழ்.மத்திய கல்லூரி அதிபருமான க.இராசதுரை அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இதுவரை காலமும் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களை மதிப்பீடு செய்யும் பணிகள் கொழும்பிலேயே நடைபெற்று வந்தன. இம்முறையும் மதிப்பீட்டுப் பணிகள் கொழும்பில் நடைபெறுமெனக் கருதிய யாழ்.மாவட்ட ஆசிரியர்கள் பஸ் போக்குவரத்து நெருக்கடிகளைக் காரணம் காட்டி மதிப்பீட்டுப் பணிகளுக்கு விண்ணப்பிக்கவில்லை.

இதனால் யாழ்.மாவட்டத்தில் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளை மேற்கொள்வதற்கு ஆசிரியர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. எனவே தமிழ், புவியியல், இந்துசமயம், இந்து நாகரிகம், அளவையியல், கணக்கீடு, வணிகவியல் ஆகிய பாடங்களுக்கு புதிதாக மதிப்பீட்டாளர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

எனவே மேற்குறிப்பிட்ட பாடங்களுக்கும், குறிப்பிடாத பாடங்களுக்கும் ஆசிரியர்கள் தமது மதிப்பீட்டு விண்ணப்பங்களை எதிர்வரும் முதலாம் திகதிக்கு முன் யாழ்.மத்திய கல்லூரியில் ஒப்படைக்கலாம் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-7)

நீர்வழங்கல் சபை ஊழியர்கள் கேட்கின்றனர்

# சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை எமக்குப் பெற்றுத்தாருங்கள்!

## தொண்டாவுக்கு மகஜரும் அனுப்பிவைப்பு

யாழ்ப்பாணம்,பெப்.22

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் யாழ்.பிராந்திய ஊழியர்களுக்கு வழங்கப்படவேண்டிய சம்பளம் மற்றும் ஊக்குவிப்புக் கொடை நிலுவைகளை உடனடியாக வழங்குவதுடன், அவர்களின் இடமாற்றங்களையும் ரத்துச் செய்யுமாறு வீடமைப்பு பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானுக்கு மகஜர் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்து சமய விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டிருக்கும் இந்த மகஜரில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் 16 ஊழியர்கள் கையொப்பமிட்டுள்ளனர்.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

எமது காரியாலயத்துக்குத் தொலைபேசி இணைப்பு, வாகனங்கள் குடிதண்ணீர் பரிசோதனை ஆய்வுகூடம், போட்டோ பிரதி இயந்திரம் மற்றும் அத்தியாவசியமானவற்றை உடன் வழங்கி உதவுவதுடன் பிராந்தியக் காரியாலயத்தை பொருத்தமான இடத்துக்கு மாற்றித்தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

1996ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் யாழ்மாவட்டத்தில் சிவில் நிர்வாகம் மீண்டும் ஏற்பட்ட பின்னர் பல அரச திணைக்களங்கள் சபைகள் கூட்டுத்தாபனங்கள் மற்றும் உள்நாட்டு சர்வதேச தொண்டு ஸ்தாபனங்கள் சீரமைக்கப்பட்டு, புனரமைக்கப்பட்டு முழுமையாக செயற்பட்டு வருகின்றன. ஆனால் மிக அத்தியாவசிய தேவைகளில் ஒன்றான எமது சபை மட்டும் திட்டமிட்டுப் பின்தள்ளப்பட்டு வருகிறது.

போர்நிறுத்தம் ஏற்படுத்தப்பட்டு சமாதான சூழல் தோன்றி அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வரும் இவ்வேளையில் யாழ். மாவட்டத்தின் எமது சபையின் பணிகளை மட்டும் மட்டுப்படுத்தி நிரந்தரமாக மூடிவிடும் நடவடிக்கை பிரதேச அபிவிருத்தியை பெரிதும் பாதிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

எமது அதிகாரிகளின் நடவடிக்கைகள் குறித்து சில ஊழியர்கள் மேலிடத்திற்கு அறிவித்தும் இவர்கள் தமது தனிப்பட்ட செல்வாக்கை பிரயோகித்து அவற்றை மூடி மறைத்து சட்டத்தின் கரங்களில் இருந்து தங்களைப் பாதுகாத்துக் கொண்டுள்ளனர். அதேசமயம் ஊழல்களுக்குத் துணைபோகாது நேர்மையான ஊழியர்களை திடீர் இடமாற்றம், சேவை நீடிப்பு மறுப்பு, கட்டாய ஓய்வு ஆகிய வழிகளில் துன்புறுத்தி இந்த ஊழியர்களை சேவையில் இருந்து நீக்கி விடுவதன்மூலம் காரியாலயத்தை மூடிவிட வழிகோரி வருகின்றனர் - அந்த அதிகாரிகள்.

இதேசமயம் நேர்மைமிக்க ஊழியர்களின் இடைக்கால சம்பள முற்பணக் கொடுப்பனவு, 60 வயது வரையான சேவை நீடிப்பு என்பவற்றை வழங்கி எமது பிராந்தியத்தில் புதிய கிராமிய குடி தண்ணீர் விநியோக திட்டங்களை வடிவமைத்து நிர்மாணிப்பதுடன் இயங்கிக் கொண்டிருக்கும் நீர் விநியோகத் திட்டங்களை அபிவிருத்தி செய்யவும் அவசர நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம் - என்றுள்ளது. (க-4)


உலக தமிழோசை

"உலக தமிழோசை"

'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்' கடல்கடந்தும் கன்னித்தமிழ் மறவா கனேடிய தமிழர்கள் மத்தியில் கலை, பண்பாடு தமிழ்மொழியுடன் பேணப் படுவது யாவரும் அறிந்ததே.

"விளம்பரம்" என்ற பெயரில் கடந்த பன்னிரண்டு வருடகாலமாக மாதமிருமுறை இலவசமாக வெளிவரும் பத்திரிகை என்பதை வெளிப்படுத்துவதில் பெருமை அடைகின்றோம்.

எழுத்தாளர்களின் ஊக்கம், வாசகர்களின் பாராட்டு, வர்த்தகர்களின் ஆதரவு பத்திரிகை வெளிவர ஆதரவு நல்கின்றன. அத்துடன் எம்மை இன்னமும் உலகத் தமிழோசை "சஞ்சிகையை" உலகளாவிய ரீதியில் வெளியிட கால்கோள் இட்டுள்ளது. சர்வதேசரீதியில் பல எழுத்தாளர்கள் ஆக்கமும் ஊக்கமும் தருகின்றனர். இதேவேளையில் மேலும் பல ஈழத்து எழுத்தாளர்களின் படைப்புக்களையும் எதிர்பார்க்கின்றோம். இந்த ஆக்கங்கள் பலதரப்பட்டவர்களுக்கும் ஏற்றவையாக இருப்பது விரும்பத்தக்கது.

*யாழ். தொடர்புகளுக்கு:-*

இ.செல்வநாதன் (நகுலன்)
நியூ லக்சுமி ரேட்ஸ்,
கே.கே.எஸ்.வீதி,
கொக்குவில் சந்தி.
T.P.:- 2928

VLAMBARAM PUBLICATIONS,
P.O.Box 37527,
*31, Tapscott Road,*
*SCARBOROUGH, ONTARIO M1B 5P9, CANADA.*
(585)


## நீதி நூல் மனனப் போட்டி

யாழ்ப்பாணம்,பெப்.22

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பகவிநாயகர் ஆலயத்தின் சைவ சமய அபிவிருத்திக்கழகம் வருடாந்தம் நடத்திவரும் நீதிநூல் மனனப் போட்டி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் யாழ்.இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ்குடாநாட்டின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த தரம் ஒன்று, தரம் இரண்டு வகுப்பு மாணவர்கள் 750 பேர் இந்தப் போட்டிகளில் பங்குகொள்வர். (க-7)

## தொழில்நுட்ப மாணவருக்கு ஒன்றியம் அழைப்பு

சமாதானத்திற்கான பாத யாத்திரை தொடர்பாக ஆராய்வதற்கான அவசர கலந்துரையாடல் இன்று காலை 10 மணியளவில் தொழில்நுட்பக் கல்லூரியில் நடைபெற உள்ளது.

பகல் நேர, பகுதிநேர மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது. (க)

## மானிப்பாயில் நாவலர் விழா

மானிப்பாய் இந்து சமய விருத்திச் சங்கம் நடத்தும் நாவலர் விழாவும், மண்டப நிறுவுநர் படத் திரைநீக்கமும் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் மானிப்பாய் வேலக்கைப் பிள்ளையார் ஆலயத்துக்கு அருகில் பாலர் பாடசாலையில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வுகளில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியர் ஆறு.திருமுருகன் பிரதம விருந்தினராகவும், வர்த்தக வங்கி முகாமையாளர் ச.இரவீந்திரா சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். (க-7)

## பலாலி வீதியில் விபத்து

யாழ்ப்பாணம்,பெப்.22

யாழ். - பலாலி வீதியில் கந்தர் மடம் சந்திக்குச் சமீபமாக நேற்று நண்பகல் போக்குவரத்துச் சபையின் பஸ்ஸும் காரும் விபத்துக்குள்ளாயின.

இந்த விபத்தின் போது எவருக்கும் காயம் ஏற்படவில்லை. எனினும் இரு வாகனங்களும் சிறியளவில் சேதத்திற்கு உள்ளாகின.

பொலீஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து விசாரணைகள் நடத்தினர். (க-ரி)

## அனைத்துப் பீட மாணவர் கூட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.22

யாழ்.பல்கலைக்கழக அனைத்துப்பீட மாணவர்களுக்கான அவசர கூட்டம் ஒன்று இன்று பிற்பகல் 2 மணிக்கு பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

இந்தக் கூட்டத்தில் அனைத்துப் பீட மாணவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது. (க-180)

# எல்லை தாண்டிய மீனவர் கைது!

தென்மராட்சி,பெப்.22

வல்வெட்டித்துறை ஆதிகோயிலடி கடற்பகுதியில் படையினரால் அனுமதிக்கப்பட்ட பகுதிக்கு அப்பால் நேற்று முன்தினம் காலை மீன பிடிக்கச் சென்ற 13 மீனவர்களை கடற்படையினர் பிடித்து வடமராட்சி 524 படையணி அலுவலகத்தில் ஒப்படைத்தனர்.

வடமராட்சி கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்தினர் மேற்கொண்ட முயற்சியினால் பிடிக்கப்பட்ட 13 மீனவர்களும் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட கட்டு மரங்கள், மீன்பிடி உபகரணங்கள் இன்னும் மீள வழங்கப்படவில்லையென சமாசத்தினர் தெரிவித்தனர். (ஒ-117)


**JAFFNA COLLEGE PRIMARY SCHOOL**

*Cordially Invites you to its*

**Annual Inter - House Athletic Meet**

to be held on

Friday 22nd February 2002 at 2.00 p.m.

***at the Bicknell Field***

under the distinguished patronage of

**Mr.& Mrs.S.SUNTHARASIVAM**

Asst, Director of Education,

Educational Management - Valigamam Zone

Mr.A.Jeyarajan SUPERVISOR (C-20841) Rev.A.A.Paul PRINCIPAL


## கண்ணீர் அஞ்சலி

எமது பாசமிகு சகோதரன்,

பரமு குகநேசன் (பொறியியலாளர்) அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி பரமு பவானி

(புத்தூர் கிழக்கு, புத்தூர்)

அவர்கள் 18.02.2002 அன்று சிவபதம் அடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அவர்தம் குடும்பத்தினருடன் நாமும் துயரினைப் பகிர்ந்து கொள்வதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

பொறியியற்பீட நண்பர்கள்,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

(C/20242)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பரமேஸ்வரி பூபாலசிங்கம் (கிளி)

கோண்டாவில் கிழக்கு, பொற்பதி றோட், செருக்கம்புலம் ஒழுங்கையைச் சேர்ந்த திருமதி பரமேஸ்வரி பூபாலசிங்கம்(கிளி) நேற்று (21-02-2002) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகர் - செல்லம் தம்பதியினரின் கனிஷ்ட புதல்வியும் பூபாலசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், குமாரசாமி, சரஸ்வதி(ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தங்கையும், திருமதி சந்திரவதனா சந்திரராசா, ஜெயகௌரி, ஜெயமலதா ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சந்திரராசாவின்(முன்னாள் பொதுமுகாமையாளர், வலிகாமம் ப.நெ.வ.அ.கூ.ச. கொத்தணி) மாமியாரும் அசானி, அனாத், அக்ஷானி ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும், குமாரசாமி(ஜேர்மனி), பரிமளம், பரமலிங்கம், சண்முகலிங்கம், செல்வரட்டிணம், கமலாதேவி, செல்வராணி ஆகியோரின் அன்பு மச்சாளும், பிரியதர்ஷனி(ஜேர்மனி), அன்பழகன்(ஜேர்மனி) ஆகியோரின் சிறியதாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(23-02-2002) சனிக்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் கிழக்கு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*செருக்கம்புலம்,*
*கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.*

நா.பூபாலசிங்கம் (கணவர்) (979)

## திருமதி இந்திராதேவி அருளானந்தம்

தங்காலைய வீதி, தும்பளை, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி இந்திராதேவி அருளானந்தம் நேற்று (21.02.2002) வியாழக்கிழமை அதிகாலை காலமாகிவிட்டார்.

அன்னார் தும்பளை அருளானந்தத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற விஸ்வநாதர் மற்றும் மனோன்மணி ஆகியோரின் அன்பு மகளும், கணேசதுரை (ஆஸ்திரேலியா), Dr.ஜெகநாதன் (ஓய்வுபெற்ற பணிப்பாளர்நாயகம், சுகாதாரத் திணைக்களம்), பத்மநாதன் (கனடா), வைகுந்தநாதன், தில்லைநாதன் (ஜேர்மனி), சந்திராதேவி (ஆசிரியை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.02.2002) வெள்ளிக்கிழமை பிற்பகல் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பருத்தித்துறை கோரியடி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தங்காலைய வீதி,*
*தும்பளை,*
*பருத்தித்துறை.* (986)

தகவல்:-
திருமதி மனோன்மணி
*(தாயார்)*

## வினாசி மாரிமுத்து

தொல்புரம் கிழக்கு, சுழிபுரத்தைச் சேர்ந்த வினாசி மாரிமுத்து நேற்று (21.02.2002) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சீதையின் அன்புக் கணவரும் கலாதேவி, ஞானம், கருணாநிதி (ஆசிரியர், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயரத்தினம், நாகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும் பகீரதன், யசிந்தா, சயந்தா, குஷாளினி, கிரிஜா ஆகியோரின் அன்பு பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.02.2002) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணி அளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*தொல்புரம் கிழக்கு,*
*சுழிபுரம்.* (987)

தகவல்:
மா.கருணாநிதி
(பௌதிகவியல் ஆசிரியர்)

## உதயன்

## ரத்வத்தைமார் விடயத்தில் நீதி நிலைநாட்டப்படுமா?

முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தை கைது செய்யப்பட்டிருக்கின்றார்.

பொதுத் தேர்தல் தினத்தன்று கண்டி உடத்தலவின்னவில் வைத்து மடவளைப் பகுதியைச் சேர்ந்த பத்து முஸ்லிம் இளைஞர்கள் கொடூரமாக - துடிக்கத் துடிக்க - கொலை செய்யப்பட்டிருந்தனர்.

அந்தக் கொலைகளுக்குச் சதிசெய்தமை, தூண்டுதலாக இருந்தமை, சந்தேகநபர்களை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யத் தவறியமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் ஜெனரல் ரத்வத்தை மீது சுமத்தப்படவிருப்பதாகக் கூறப்படுகின்றது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் மாமனார் முறையானவர் ஜெனரல் ரத்வத்தை. முன்னைய அரசிலும்சரி - இப்போது ஐக்கிய தேசிய முன்னணி அரசு ஆட்சியில் இருக்கும்போதும்சரி - மிகவும் அரசியல் செல்வாக்கும் பலமும் மிக்கவராகக் கருதப்படுபவர் ரத்வத்தை.

அவர் கைதுசெய்யப்பட்டதன் மூலம், இலங்கையின் சட்டம், நீதிக்கு முன் எவரும் தப்பமுடியாது - அவர் எத்தகைய செல்வாக்குள்ள நபராக இருந்தாலும் - என்ற எண்ணக்கரு உருவாக்கப்பட்டிருக்கின்றது.

ஆனால், அவரது கைதுக்குப் பின்னான சம்பவங்கள் இந்த எண்ணக்கரு உண்மைதானா அல்லது வெறும் மாயையா என்ற சந்தேகத்தை எழுப்பியுள்ளன.

'நீதி நிலைநாட்டப்படுவது மட்டுமன்றி, நிலைநாட்டப்படுவது போல காட்டப்படவும் வேண்டும்' என்பது நீதித்துறை சார்ந்த ஒரு நன்மொழி.

ரத்வத்தை கைதுவிவகாரத்தில் நீதி நிலைநாட்டப்பட்டதோ இல்லையோ, நிலைநாட்டப்பட்டதாக மக்களுக்குப் புலனாகவில்லை என்பதுதான் உண்மை.

பொலிஸாரால் கைதுசெய்யப்படும் சந்தேகநபர்கள் பொதுவாக பொலிஸ் வாகனங்களில் நீதிமன்றுக்குக் கொண்டு செல்லப்படுவதுதான் வழமை. அதுபோல நீதிமன்றின் காவலுக்குக் கீழ் கொண்டுவரப்படும் சந்தேகநபர்கள் மற்றும் குற்றவாளிகள் சிறைக்காவலர்களால் சிறைச்சாலை வாகனத்தில்தான் சிறைக்குக் கொண்டுசெல்லப்படுவர்.

நாட்டில் மிகவும் பலம்பொருந்திய - அதிகாரம் மிக்கவர்களிடம் செல்வாக்குக் கொண்ட - ரத்வத்தை போன்ற ஒருவர், அதுவும் பத்துக் கொடூரப் படுகொலைகளுடன் தொடர்புடையவராகச் சந்தேகப்படுகின்ற - கிரிமினல் குற்றச் சந்தேகநபர் - ஹெலிகொப்டரிலும், ஆடம்பரக்காரிலும் நீதிமன்றுக்கு கூட்டிவரப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டிருக்கின்றார்.

திறந்த நீதிமன்றத்தில் பொதுமக்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் பார்த்திருக்க அவர் ஆஜர் செய்யப்படவில்லை. நீதிவானின் அறையில் அவர் ஆஜர் செய்யப்பட்டார். அதற்குச் சட்டத்தில் இடம் உண்டு என்பது மறுக்கக் கூடியதல்ல.

ரத்வத்தை கைதான மறுகணமே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி, பிரதமரிடம் தனது செல்வாக்கைப் பிரயோகிக்கத் தொடங்கிவிட்டதாகத் தகவல். அடுத்து பிரதமரிடம் இருந்து உள்துறை அமைச்சருக்கு உத்தரவுகள் பறந்தன. அங்கிருந்து அதிகாரிகளுக்குக் கட்டளைகள் கிடைத்தன.

விளக்கமறியல் சிறையில் இருக்க வேண்டிய ரத்வத்தை, இப்போது - அவரது முன்னாள் சக அமைச்சரான ரெஜி ரணதுங்க போன்றோர் பின்பற்றிய பாணியில் - கொழும்பில் நவீன ஆஸ்பத்திரி ஒன்றில் ஓய்வு எடுத்துக்கொண்டிருக்கின்றார்.

ஸ்ரீலங்கா அரசைப் பொறுத்தவரை இராணுவத்துறையில் அவர் போற்றப்படுவதற்குரியவராக இருக்கலாம். அதற்காகத்தான் தொண்டர்படையில் வெறும் லெப்டினன்ட் கேணல் பட்டம் பெற்றிருந்த அவருக்கு ஒருநாளில் கேணல், பிரிகேடியர், மேஜர் ஜெனரல், லெப்டினன்ட் ஜெனரல் தர நிலைகளை எல்லாம் ஒரேதாண்டாகத் தாண்டி ஜெனரல் பட்டத்தை வழங்கினார் அவரது மருமகளான ஜனாதிபதி குமாரதுங்க.

இராணுவப் பட்டத்துக்கான தர நிலை உயர்வில் பின்பற்றப்பட்ட குறுக்கு வழி, ரத்வத்தையைக் குற்றங்களிலிருந்தும் விடுவிப்பதற்காக நீதிமன்ற நடைமுறை விவகாரங்களிலும் பின்பற்றப்படக்கூடாது என்பதுதான் நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என விரும்பும் அனைவரினதும் பிரார்த்தனையாகும்.

ரத்வத்தையின் இரு மகன்மாரும் கூட பிரபலங்கள்தான். இந்தப் படுகொலைகள் தொடர்பாகத் தேடப்பட்டு வரும் - கிரிமினல் சந்தேகநபர்களான - இந்த இருவரும்கூட இன்னும் கைது செய்யப்படாமல் தலைமறைவாக வாழ்ந்துவருவதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.



கோப்பாயில் அமைக்கப்பட்டுள்ள ஸ்ரீ சத்தியசாயிசேவா மனித மேம்பாட்டுக் கல்வி ஆசிரியர் பயிற்சி நிலையத்தைத் மத்திய இணைப்புக் குழுவின் பிரதித் தலைவர் ஸ்ரீ ஜெகத் குணசேகரா கடந்த 3ஆம் திகதி திறந்துவைத்தபோது எடுக்கப்பட்ட படம். (ஐ)

## வயோதிபர்களுக்கு மூக்குக் கண்ணாடி; யாழ்.பல்கலை மருத்துவபீடம் வழங்கும்

யாழ்ப்பாணம்,பெப்.22

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் வயது முதிந்தவர்களுக்கு மூக்குக் கண்ணாடிகளை வழங்க யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடம் நடவடிக்கை எடுத்துவருகிறது.

புனர்வாழ்வு, மீள்குடியமர்வு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனாவால் வழங்கப்பட்ட இந்த மூக்குக் கண்ணாடிகளைப் பெறவிரும்புபவர்கள் எதிர்வரும் 8ஆம் திகதிக்கு முன்னர் - மருத்துவபீட பீடாதிபதி அலுவலகத்தில் உரிய விண்ணப்பப்படிவத்தைப் பெற்று பூரணப்படுத்தி ஒப்படைக்கவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க-6)

## நாட்டு நடப்பு

### ஆச்சி உயிரை நீத்தாள்

ஐந்து பெண் பிள்ளை பெற்றேன்
அனைத்தையும் வளர்த்தேன் ஒன்றாய்
நொந்து நான் வியர்வை சிந்தி
நோகாமல் படிக்க வைத்தேன்
சொந்தத்தில் மாப்பிளையும் தேடி
சுகம்பெற கட்டி வைத்தேன்
அந்த பெண் ஐந்தும் ஒன்றாய்
அடியோடு கை விட்டுவிட்டார்
சொந்தத்தில் எவரும் எனக்கு இல்லை
சோத்திற்கும் வழியு மற்றேன்
வெந்துளம் கொதிக்குது ஐய்யா!
வேறென்ன இப்பாவி செய்வேன்
இந்த நஞ்சினை உண்ணப் போறேன்
இந்நிலை இனி பிறர்க்கு வேண்டாம்
முந்தியே உன்னை எண்ணி விட்டு
முழுதுமாய் எழுதி விட்டேன்
தந்திடு இக் கவிதை ஒன்றை
தணலாகி உடம்பு எரியுமுன்பே!

*- விகடகவி.*

## திறந்த பல்கலையில் இறுதி வருட முகாமைத்துவப் பரீட்சை

யாழ்ப்பாணம்,பெப்.22

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் முகாமைத்துவ டிப்ளோமா கற்கைநெறி இறுதிவருட மாணவர்களுக்கான பரீட்சைகள் எதிர்வரும் 2ஆம் திகதி ஆரம்பமாகின்றன.

யாழ்.பிராந்திய அலுவலக மண்டபத்தில் இந்தப் பரீட்சைகள் பிரதி சனி, ஞாயிற்றுக்கிழமைகளிலேயே நடைபெறும்.

பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பப்பட்டுள்ளதாகவும் - அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாதவர்களும் பரீட்சை மண்டபத்துக்கு சமுகமளித்தால் பரீட்சை எழுத ஒழுங்குசெய்து தரப்படும் எனவும் - நிறுவனத்தின் இயக்குநர் தெரிவித்தார். (க-6)

## அபிவிருத்திப் பணிகளால் மட்டும் தமிழர் பிரச்சினை தீர்ந்துவிடாது!

### சித்தார்த்தன் கூறுகிறார்

கொழும்பு,பெப்.22

அபிவிருத்திப் பணிகளை மட்டும் செய்வதனால் தமிழ் மக்களது பிரச்சினை தீர்ந்துவிடாது.

- இவ்வாறு தெரிவித்தார் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன்.

வவுனியா சின்னப்புதுக்குளம் சமுர்த்தி வங்கித் திறப்புவிழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவித்ததாவது:-

பொருளாதாரத் தடைகளை நீக்குவதன் மூலமும், வீதிகளைத் திறப்பதன் மூலமும் சமாதானம் ஏற்பட்டுவிடும் என்பது அல்ல. தமிழ்மக்கள் சுதந்திரமாகப் பணிகளைச் செய்யும் சூழ்நிலையே தற்போது அவசிய தேவை. தமிழ்மக்கள் இழந்த சுதந்திரத்தை, நிம்மதியை மீண்டும் பெறுவதில் நாம் முனைப்புடன் இருக்கின்றோம்.

தமிழ்மக்கள் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டதற்கு முக்கிய காரணங்கள் அடக்குமுறைகளைக் கொண்ட அரசுகளே ஆகும். சமுர்த்தி திட்டமானது கடந்த அரசால் ஆரம்பிக்கப்பட்டாலும் அதேவடிவில் இந்த அரசும் அதனை முன்னெடுத்துச் செல்கின்றது - என்றார்.

இவ்விழாவில் சமுர்த்தி அமைச்சர் ஆர்.ஏ.டி.சிறிசேன, நாடாளுமன்ற உறுப்பினர் ரிசாட் பதியுதீன் ஆகியோரும் உரையாற்றினர். (ஐ-ரி)

## பாடசாலைகள் சொந்த இடங்களில் கூடிய விரைவில் இயங்க முடியும்

### மெய்வன்மைப்போட்டி நிகழ்வில் மகேஸ்வரன்

நீர்வேலி,பெப்.22

யாழ்குடாநாட்டில் தற்போது இடம்பெயர்ந்த நிலையில் இயங்கும் பாடசாலைகளை மீண்டும் அவற்றுக்கான சொந்த இடங்களில் கூடிய விரைவில் இயங்க வைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்துதருவேன்.

- இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் இந்துகலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன்.

இடம்பெயர்ந்த நிலையில் இயங்கும் அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலை, அச்செழு மெதடிஸ்த மிசன் வித்தியாலயம் ஆகியன ஒன்றிணைந்து நடத்திய இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் நீர்வேலியில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் தனது உரையில் மேலும் கூறியதாவது:-

பல்வேறுதரப்பட்ட நெருக்கடிகளுக்குக்கு மத்தியிலும் இவ்விளையாட்டுப் போட்டி சிறப்பாக நடைபெற்றது மகிழ்ச்சிக்குரியதாகும். அடுத்த ஆண்டு விளையாட்டுப் போட்டியை சொந்த இடத்தில் நடத்தவும், பாடசாலை தனது சொந்தக் கட்டடத்தில இயங்கவும் என்னாலான முயற்சிகளைச் செய்வேன். இன்றைய நிலையில் இது கடினமான ஒரு விடயமல்ல.

விரைவில் சமாதான சூழல் உருவாகிவிடும். அத்தகைய நிலையில் அச்செழுவில் உள்ள இராணுவ முகாமை அகற்றுவது கடினமான காரியமல்ல. அடுத்த ஆண்டு இப்பாடசாலைகள் தத்தமது சொந்த இடங்களில் இயங்குவதோடு, விளையாட்டுப் போட்டிகளையும் சொந்த மைதானத்திலேயே நடத்த என்னாலான முயற்சிகளைச் செய்வேன் - என்றார்.

அச்செழுப்பகுதி பொது நிறுவனங்களின் பிரதிநிதிகளும் பொதுமக்களும், அச்செழுக் கிராமத்திலுள்ள இராணுவத்தினரின் முகாமை அகற்றுவதன் மூலம் மீட்டுத்தரவேண்டுமெனக்கோரி மகஜர்களை அமைச்சரிடம் கையளித்தனர். (க-7-110)

### நாளை

மாசி 11
சனிக்கிழமை
(23-02-2002)
திதி : ஏகாதசி
முன்னிரவு 11.17 வரை.
நட்சத்திரம் : திருவாதிரை
மாலை 5.55 வரை.
ஏகாதசி விரதம்
சுபநேரம் : 3.31 - 5.01
. ராகுகாலம்: 9.31 - 11.01
(பழைய நேரப்படி)

## பல்கலை மாணவர் கூட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.22

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட முதலாம் வருட மாணவர்களுக்கான கூட்டம் ஒன்று எதிர்வரும் 28ஆம் திகதி காலை10.00 மணிக்கு மாணவர் பொது அறையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.(க-4)

### உதயவாக்கு

குற்றத்தை ஒப்புக் கொள்வது நேர்மையின் முதற்படி.

## திருடிய மோட்டார் சைக்கிளை தோட்டவெளியில் கைவிட்டு ஓட்டம்!

### நீர்வேலியில் அதிகாலைவேளை சம்பவம்

நீர்வேலி,பெப்.22

அதிகாலைவேளை மோட்டார் சைக்கிளை அபகரித்துச் சென்ற திருடர்கள் டிராக்டர் வெளிச்சத்தைக் கண்டதும் அதனைத் கைவிட்டுவிட்டு ஓட்டம் பிடித்தனர்.

இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை அதிகாலை 3 மணியளவில் நீர்வேலி வடக்கில் இடம்பெற்றது.

நீர்வேலி வடக்கில் வீட்டு விறாந்தையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை இருவர் சத்தம் சந்தடியின்றி எடுத்துக்கொண்டு தோட்ட வெளியூடாக அதனைக் கொண்டுசென்றுள்ளனர். அந்தவேளை வீதியூடாக டிராக்டர் ஒன்று எதிர்பாராத விதமாக வந்துள்ளது. அதனைக் கண்டதும் மோட்டார் சைக்கிளையும் விட்டுவிட்டு அவர்கள் ஓட்டம்பிடித்துள்ளனர்.

இதனை அவதானித்த டிராக்டர் சாரதி மோட்டார் சைக்கிளிற்கு உரியவரைக் கண்டுபிடித்து அதனை அவரிடம் ஒப்படைத்துள்ளார். (க-7-110)

## வல்லிபுரக்கோயிலை அண்டிய காணிகளில் மணல் அகழ்வு

### அப்பகுதி மக்கள் அதிருப்தி

தென்மராட்சி,பெப்.22

வல்லிபுரக்கோயிலை அண்டியுள்ள காணிகளில் வாகனங்களில் மணல் ஏற்றப்படுவது குறித்து அப்பகுதி மக்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

வடமராட்சி கிழக்குப் பகுதியில் மணல் ஏற்றுவது தடைசெய்யப்பட்டதையடுத்து கடந்த இரு வாரங்களாக வல்லிபுரக் குறிச்சிப் பகுதியில் மணல் அகழ்ந்தெடுக்கப்பட்டு வருவதாக அவர்கள் கூறுகின்றனர்.

இதேவேளை - துன்னாலை வேருண்டை மயானப் பகுதியில் சட்டவிரோதமாக வாகனங்களில் மணல் ஏற்றிச்செல்லப்படுவதாக, மக்கள் வடமராட்சி தெற்கு - மேற்கு பிரதேச சபையில் முறையிட்டுள்ளதையடுத்து சட்டவிரோதமாக மணல் ஏற்ற வேண்டாமெனவும், மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் பிரதேச சபைத் தலைவர் த.ஜெயராசா அறிவித்துள்ளார். (க-117)

## அனுருத்த கைதுசெய்யப்பட்டதற்கு சுதந்திரக்கட்சி கடும் ஆட்சேபம்

கொழும்பு,பெப்.22

முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தை கைதுசெய்யப்பட்டதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி கடும் ஆட்சேபத்தைத் தெரிவித்திருக்கின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளர் மைத்திரிபால சிறிசேன நேற்றுமுன்தினம் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

முன்னைய பொ.ஐ.மு. அரசின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜெனரல் ரத்வத்தை நாட்டிற்குப் பெரும் சேவையாற்றியுள்ளார். யாழ்ப்பாணத்தை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து விடுவித்தமைக்காக நாட்டு மக்கள் அவருக்குக் கடமைப்பட்டிருக்கின்றனர் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பொய்க் குற்றச்சாட்டின் பேரிலேயே அவர் கைது செய்யப்பட்டிருக்கின்றார்.

அதற்குத் தமது கடுமையான எதிர்ப்பையும், கண்டனத்தையும் தெரிவிப்பதாகவும் - மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார். (க-4)

## கோப்பாய் பிரதேச செயலர் பிரிவு
### அபிவிருத்தித் தொண்டர்களுக்கான அறிவித்தல்

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவு - புதிய, பழைய அபிவிருத்தித் தொண்டர்கள் அனைவரையும் நாளை (23.02.2002) சனிக்கிழமை காலை 9 மணிக்கு பயிற்சி நிலையத்திற்கு வருகைதருமாறு அபிவிருத்திப் பரிசோதகர் அறிவித்துள்ளார்.

*கோப்பாய்.* (965) பிரதேச செயலகம்

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து
22-02-2002

HAPPY BIRTHDAY



# செல்வி கீர்த்திகா

**ஜீவநாதன் – நிரஞ்சனி தம்பதிகளின்**
**செல்வப் புதல்வி கீர்த்திகா**

தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (22.02.2002) வெள்ளிக்கிழமை வெகுவிமரிசையாகத் கனடாவில் கொண்டாடுகிறார். இவரை கனடாவில் இருக்கும் அப்பா ஜீவநாதன், அம்மா நிரஞ்சனி, சிவா மாமா, சித்தப்பாமார், சித்திமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், அத்தைமார், இலங்கையில் உள்ள அம்மப்பா, அம்மம்மா, தினா மாமா, பாலா மாஸ்ரர் குடும்பமும் உற்றார் உறவினர்களும் இவரை வீரபத்திரர் அருளால் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகிறார்கள்.

*இராசவீதிச் சந்தி,*
*கோப்பாய் தெற்கு, கோப்பாய்.* (969)
தகவல்:
தினா மாமா


## NIPPON GAS COOKER
வேறு எந்த தயாரிப்புடனும்
## ஒப்பிட்டுப் பாருங்கள்




நிப்பொன் காஸ் குக்கர்கள்
மூலம் காஸை சேமியுங்கள்
LANKA NIPPON
No.18, Keyzer St, Colombo-11.Tel:437735.
No.10, Trelawny Place, (Behind Milk Bar), BambalapitiyaJunc,Colombo-04.Tel:589992.
AVAILABLE ISLAND WIDE
நிப்பொன் உத்தரவாதமுள்ள தயாரிப்புக்கள்


## படக்காட்சி

யாழ்ப்பாணம், பெப்.22

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கிவரும் திரைப் படக் காட்சித் தொடரில் நாளை சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் ஆங்கில உபதலைப்புகளுடன் கூடிய ஸ்பானிஷ் மொழித் திரைப்படமான 'OUTRAGE' காண்பிக்கப்படவுள்ளது.

ஆர்வலர்களை கலந்து கொள்ளும படி புறநிலைப் படிப்பு அலகின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (க)

## மகளிர் தினப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,பெப்.22

யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபையின் மாவட்ட மகளிர்குழு சர்வதேச பெண்கள் தினத்தை முன்னிட்டு கட்டுரை, பேச்சு, நாடகம், குழுநடனம் ஆகிய போட்டிகளை நடத்தவுள்ளது.

பாடசாலை மாணவர்கள் மற்றும் மகளிர்களுக்கிடையே வெவ்வேறாக நடத்தப்படவுள்ள இந்தப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் எதிர் வரும் 28ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கான பேச்சு, கட்டுரைப் போட்டிகள் எதிர் வரும் 2ஆம் திகதி யாழ்.மணிக்கூண்டு வீதியில் உள்ள கூட்டுறவுச் சபையின் பயிற்சி நிலையத்தில் நடைபெறும். (க-7-ரி)

## ஆண்டு விழா

யாழ்ப்பாணம்,பெப்.22

சண்டிலிப்பாய், சங்கானை பிரதேச சுகாதார தொண்டர் சங்கத்தின் ஓராண்டுப் பூர்த்தி விழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாசாலையில் நடைபெறவுள்ளது. (க-7)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,பெப்.22

எழுதுமட்டுவாழ் கணேச வித்தியாலயத்தின் அபிவிருத்திச்சபை உறுப்பினர்களுக்கான வருடாந்த கலந்துரையாடல் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது. (க-7)

## யாழ்.இந்து மகளிர் மெய்வன்மைப் போட்டி ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,பெப்.22

நாளை சனிக்கிழமை நடைபெற இருந்த யாழ்.இந்து மகளிர் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டி தவிர்க்கமுடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது என்று அதிபர் அறிவித்துள்ளார்.

இந்தப் போட்டி எதிர்வரும் 27ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும் என்றும் அவர் அறிவிக்கின்றார். (க)

## வேலை வாய்ப்பு

அரசாங்க சேவையில் இருந்து ஓய்வுபெற்ற ஒருவருக்கு யாழ்ப்பாண நகருக்குள்ள தொலைத் தொடர்பகத்திலோ அல்லது மொத்த வியாபார ஸ்தாபனத்திலோ 'பில்' எழுதக்கூடிய வேலை வாய்ப்புத் தேவை. தொடர்பு கொள்க:-

விள.இல.1468,
மே/பா உதயன். (970)

# வாழ்த்துகின்றோம்



இன்று 22-02-2002 வெள்ளிக்கிழமை அகவை அறுபது காணும் எமது நிலைய முன்னாள் நிர்வாக உறுப்பினர்

**திரு.கந்தையா சிவலிங்கம்**

(கிளை முகாமையாளர் வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம் - நீர்வேலி)


அவர்களது 38 வருட கூட்டுறவுச் சேவையைப் பாராட்டுவதுடன், இவர் பல்லாண்டு காலம் இன்னும் பல சிறப்புகளைப் பெற்று இனிது வாழ கண்ணகை அம்மனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

கண்ணகை அம்மன் சனசமூக நிலையம்,
ஸ்ரார் விளையாட்டுக் கழகம்,
கோப்பாய் வடக்கு, மத்தி வாழ் மக்கள்.

கோப்பாய் வடக்கு, மத்தி. (C/20835)

# 16ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்
28
-
05
-
1934



மறைவு
08
-
02
-
2002

## அமரர் க.சி.நமசிவாயம்

*(ஓய்வுபெற்ற நில அளவையாளர்)*

வெண்ணீற்றில் நிறைந்த மேனி
கண்ணிலே கனிவு நல்ல
கருத்திலோ கடல் முத்தாகி
மண்ணிலே வந்தான் சின்னான்
வாழ்ந்திட்டான் மனிதனாக
விண்ணிலே சென்று விட்டான்
வெற்றுடல் தனைவிடுத்தே!

எங்கள் நெஞ்சமெல்லாம் நிறைந்து நின்று பாசத்தோடும் பண்போடும் வளர்த்த அன்புத் தெய்வத்தின் ஆத்மாசாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (22-02-2002) வெள்ளிக்கிழமை நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் நாளை (23-02-2002) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*(தனிப்பட்ட அழைப்புகள் தவிர்க்கப்பட்டுள்ளன.)*

*193/4, பிறவுண் றோட்,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.*

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
மைத்துனர்மார், மைத்துனிமார். (966)

# மரண அறிவித்தல்

**தம்பு ஐயாத்துரை** *(சிகரம் பந்தல் உரிமையாளர்)*

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு ஐயாத்துரை நேற்று (21.02.2002) வியாழன் காலமானார்.

அன்னார் தம்பு - சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.02.2002) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அளவெட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மில் லேன், மல்லாகம்* (968)
தகவல்:-
ஐ.ஜெயரட்ணம் (ரகு - *மகன்*)



இலங்கை வங்கி ரண் சுரக்கும் கடன் சேவை

சகல கிளைகளின் மூலம்

உங்கள் அவசர உடனடிப் பணத் தேவைகளுக்கு இலங்கை வங்கியின் 'ரண் சுரக்கும் கடன் சேவை' மூலம் மிக இலகுவில் பணம்.

தங்கத்தின் பெறுமதிக்கேற்ற கூடிய பணமும், நகைகளின் பாதுகாப்பும், இரகசியப் பேணலும் வழங்கப்படுகின்றது.



மட்டக்களப்பில் நடந்த 'பொங்குதமிழ்' காட்சிகள்

### பாத யாத்திரைக்கு பங்களிப்புச் செய்வோம்

# சமாதான வேட்கையை வெளிப்படுத்த நல்லதொரு தருணம் வந்துள்ளது

யாழ்ப்பாணம்,பெப்.22

ஆன்மீக வழியிலும் அமைதி வழியிலும் நாம் எம் சமாதான வேட்கையை வெளிப்படுத்த நல்லதொரு தருணம் வந்துவிட்டது. எனவே நாம் அனைவரும் ஒன்றுதிரண்டு இப்பாத யாத்திரையில் பங்குகொள்வதன்மூலம் சமாதானத்திற்கான எமது பேராவலை வெளிப்படுத்துவோம்.

நாளை சனிக்கிழமையும் மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவுள்ள பாத யாத்திரையை முன்னிட்டு சர்வமத பாத யாத்திரை ஒருங்கிணைப்புக் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சர்வ மதத்தினரின் அழைப்பின் பேரில் குடாநாட்டில் சமாதானத்திற்கான நீண்டதொரு பாத யாத்திரை மனித நேய அமைப்புகளின் உதவியுடன் மேற்கொள்ளத் தயாராகி வருகிறது.

ஆன்மீக வழியிலும் அமைதி வழியிலும் நாம் எம் சமாதான வேட்கையை வெளிப்படுத்த நல்லதொரு தருணத்தை இப்பாத யாத்திரை உண்டுபண்ணியுள்ளது.

சமாதானத்தைத் தேடியலைகின்ற எம்மக்களின் ஓர் அடையாள வெளிப்பாடாகவும் இந்த யாத்திரை அமைகின்றது. அரசியல் சாயமில்லாத, ஆர்ப்பாட்டக் கலப்பில்லாத தனியே ஆன்மீக, சாத்வீக வழியிலான இப்பாத யாத்திரை நீதியோடு கூடிய சமாதானத்தை எம் நாட்டில் தோற்றுவிக்கவேண்டும்.

நாட்டிலே முன்னெடுக்கப்படுகின்ற இந்த சமாதானப் பேச்சுக்களுக்குரிய முன் ஆயத்தங்கள் முனைப்புப் பெறவும், முழுமையான சமாதானத்தை எட்டவும், செபிக்கவும், ஆசிக்கவும், எமது சமாதான வாஞ்சையை வெளிக்காட்டவும் ஏறத்தாழ 40 கிலோமீற்றர் நீளமான இந்த இருநாள் பாத யாத்திரை வழிவகுக்கும் என்பது எமது எதிர்பார்ப்பாகும்.

ஏராளமான ஊர்வலங்களையும், ஆர்ப்பாட்டங்களையும் கடந்த காலங்களில் கண்டு எமது மக்கள் சோர்ந்துவிட்டார்கள். இவற்றில் பல எவ்வித முன்னேற்றத்தையும் ஏற்படுத்தவில்லை என்பது ஏதோ சிலவேளைகளில் உண்மையாகவும் இருக்கலாம். ஆனாலும் வரலாற்றின் முக்கிய திருப்பத்தில் நிற்கின்ற நாம் சமாதான விரும்பிகளின் கரங்களைப் பலப்படுத்துவோம். அவர்களுக்கு ஆத்மீக பலம் சேர்ப்போம்.

தளர்வுகளும், தாமதங்களும் சமாதான முயற்சிகளை தடம்புரளச் செய்து, தடுத்து நிறுத்தாமல் முன்னேறி வெற்றிபெற எம் பங்களிப்பினைச் செய்வோம். விளக்கமின்மையும், நம்பிக்கையின்மையும் அகன்று, புரிந்துணர்வோடும் விட்டுக்கொடுப்போடும் சமாதானம் சாத்தியம் என்பதை அறிவுறுத்தவும் இந்தப் பாத யாத்திரை வாய்ப்பளிக்கட்டும்.

உடலை வருத்தி, உண்டி சுருங்கி, வெயிலிலும், வியர்வையிலும் தேடுகின்ற இந்தச் சமாதானத் தேடல் எம் தேசத்தினுடைய தேவையாக இருப்பதைக் குறித்துக்காட்டுகின்ற அடையாளமாக இருக்கட்டும். சமாதானத்தைத் தேடுவோம்; சமாதானத்தைக் கண்டடைவோம் - என்றுள்ளது.(க-8)

## மட்டுவில் பாடசாலை வளவில் கண்டெடுக்கப்பட்ட விமானக் குண்டு!

தென்மராட்சி,பெப்.22

மட்டுவில் சந்திரபுரஸ்கந்தவரோதய மகா வித்தியாலயத்தில் துப்புரவுப் பணியில் ஈடுபட்ட மாணவர்கள் பற்றைக்குள் காணப்பட்ட விமானக் குண்டு ஒன்றைக் கண்டுபிடித்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பாடசாலையில் இடம்பெற்ற சிரமதானத்தின்போதே வெடிக்காத குண்டு கண்டுபிடிக்கப்பட்டது.

மாணவர்களுடன் கண்ணிவெடிப் பரிசோதனைப் படையினரும் பரிசோதனையில் ஈடுபட்டதால் அவர்கள் அவ்விடத்திற்கு வந்து அந்தக் குண்டை செயலிழக்க வைத்தனர்.

இதேவேளை - பரிசோதனைப் படையினரால் பாடசாலை வளவில் பத்துக்கு மேற்பட்ட மிதிவெடிகள் மீட்டெடுத்து செயலிழக்கச் செய்யப்பட்டன.

2000ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களால் வித்தியாலயத்தின் இருமாடிக் கட்டடம் உட்பட அனைத்து கட்டடங்களும் சேதமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

வித்தியாலயத்திற்கு அருகில் வீழ்ந்து வெடித்த விமானக் குண்டினால் அங்கு பெரிய பள்ளம் ஒன்றில் குளம் போன்று நீர் நிறைந்து காணப்படுகிறது. (க-117)

## கசிப்பு விற்ற பெண்ணுக்கு கடூழியச் சிறை!

வடமராட்சியில் கசிப்பு விற்கும் ஒருவருக்கு பத்துமாத கடூழியச் சிறைத் தண்டனை பருத்தித்துறை நீதிவானால் விதிக்கப்பட்டது.

ஏற்கனவே கசிப்பு விற்பனை செய்தமைக்காக பருத்தித்துறை சந்தை மேற்கு ஒழுங்கையைச் சேர்ந்த இந்தப் பெண்ணுக்கு அபராதம் விதிக்கப்பட்ட போதிலும் மீண்டும் கசிப்பு விற்பனையில் ஈடுபட்டதாகக் கடந்த திங்கட்கிழமை பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்செய்தபோதே இந்தத் தண்டனை விதிக்கப்பட்டது. (க-117)

## கிணற்றில் வீழ்ந்து பெண்மணி மரணம்

யாழ்ப்பாணம்,பெப்.22

மனநோயால் பாதிக்கப்பட்டவர் எனக் கருதப்படும் குடும்பப் பெண்மணி ஒருவர் கிணற்றுக்குள் வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த அரியநாயகம் அன்னலட்சுமி (வயது 53) என்ற பெண்மணியே நேற்றுமுன்தினம் அதிகாலையில் கிணற்றுக்குள் வீழ்ந்து உயிரிழந்ததாகக் கூறப்பட்டது.

இவரது சடலம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டு, மரண விசாரணைகள் மற்றும் பிரேத பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (க-6)

## சபையில் ஒலித்த அதிர் வேட்டுக்கள்

**அமைச்சர் டபிள்யூ.கே.எம்.லொக்குபண்டார (ஐதே.மு.)**

கண்டியில் பத்துப்பேரை ஒன்றாகக் கொன்றுகுவித்தபோதும்கூட பொதுமக்கள் ஐக்கிய முன்னணியால் தேர்தலில் வெற்றிபெற முடியவில்லை. ஆனால் நாங்கள் வடக்கில் பாதைகளைத் திறந்துவிட்டோம்; அப்பகுதி மக்களின் மனங்களையும் வென்றுவிட்டோம்.

குருடனுக்குக் குருடன் வழிகாட்டுவதுபோல் எதிர்க்கட்சி உறுப்பினர் விமல் வீரவன்ஸவும், மங்கள சமரவீரவும் பேசுகின்றனர். இவர்களின் பின் ஒரு குருடர் பட்டாளமே ஊர்வலம் போகின்றது.

**நிமால் சிறிபால டி சில்வா (பொ.ஐ.மு.)**

தென்பகுதியில் சிங்கள மக்களிடம் சண்டித்தனம் காட்டி எங்கள் உறுப்பினர்களையும் ஆதரவாளர்களையும் சிறையில் அடைத்துள்ளீர்கள். ஆனால் வடக்கே புலிகளிடம் மூன்று நான்காக மடிந்து மண்டியிடுகிறீர்கள்.

**அமைச்சர் லொக்குபண்டார (ஐ.தே.மு.)**

நண்பர் தினேஸ் குணவர்த்தன எதையோ வாதிக்கின்றார். அது சிங்களமா ஆங்கிலமா என்பது புரியவில்லை. நான் சுத்த சிங்களத்தில் பேசுகின்றேன். அது அவருக்கு விளங்காவிட்டால் நான் என்ன செய்ய முடியும்.

**வீ.புத்திரசிகாமணி (பொ.ஐ.மு.)**

இன்றைய அரசாங்கத்தினர் இன்னும் வெற்றிக்களிப்பில் இருக்கின்றனர். நம்மைமறந்த நிலையில் எதைச் செய்கிறோம என்பதே தெரியவில்லை. இதனால் இவர்கள் எமது கட்சிக்காரர்களைத் தாக்குவதில் திருப்தி அடைகின்றனர்.

**ரிச்சர்ட் பத்திரன (பொ.ஐ.மு.)**

தேர்தலில் தோற்றுவிடுவோமோ என்ற பயத்தில் அரசு எங்கள் கட்சியின் தேசிய அமைப்பாளர் அனுருத்த ரத்வத்தையைக் கைதுசெய்துள்ளது.

**ஒரு குரல்**

அவர் தேசிய மயமாக்கப்பட்டுள்ளார்.

**ரிச்சர்ட் பத்திரன (பொ.ஐ.மு.)**

தங்கையைக் காட்டி அக்காவைத் தலையில் கட்டிவைத்த கதைபோல இருக்கிறது உள்ளூராட்சி சபைகள் தேர்தல் திருத்தச் சட்டம். சட்டத்தில் கூறப்பட்டுள்ளது ஒன்று. செயல் படுத்தப்படப்போவது இன்னொன்று.

**நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வர்**

இந்தச் சபையின் அதிமுக்கிய உறுப்பினர் ஒருவர் காணாமற்போய் உள்ளார். அவர்தான் முன்னாள் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க. எதிர்க்கட்சிகள் அவர்மீது அக்கறை கொள்ளாவிட்டாலும் எமது சக உறுப்பினர், இந்தச் சபையில் சத்தியம் செய்துகொண்டவர். அவரைப் பற்றிய அக்கறை எங்களுக்கு உண்டு. எதிர்க்கட்சியினர் அவரைத் தேடிக் கண்டு பிடிப்பார்களா?

# உள்ளூராட்சி திருத்தச் சட்டமூலத்தை 'புலிகள் சட்டம்' என்பது சரியா?

### அமைச்சர் லொக்கு பண்டார கேள்வி

கொழும்பு,பெப்.22

சரியான விடயங்களை அறிந்து கொள்ளாமல் உள்ளூராட்சி திருத்தச் சட்டமூலத்தை 'புலிகள் சட்டம்' என்று கூச்சல் போடுவதா?

- இவ்வாறு நீதி, பௌத்த சாசன அமைச்சர் டபிள்யூ. கே.ஏ.எம். லொக்கு பண்டார எதிர் கட்சியினரிடம் கேள்விகளைத் தொடுத்தார்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் திருத்தச்சட்ட வரைவு மீதான விவாதத்தை ஆரம்பித்து வைத்த அமைச்சா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் -

உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களின்போது இடம்பெறும் ஊழல், மோசடி, அதிகார துஷ்பிரயோகம், கைலஞ்சம் கொடுத்தல் முதலான முறைகேடுகள் ஒழிக்கப்படும் வகையில் ஆட்சேப மனுக்களைத் தாக்கல் செய்யும் உரிமை புதிய திருத்தச் சட்டத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனை அறிந்து கொள்ளாது இதனை 'புலிகள் சட்டம்' என்று கூச்சல் போடுவதா? - என்றார்.

தற்போது நடைமுறையில் இருக்கும் சட்டங்களின்படி ஜனாதிபதி தேர்தலைப் பிற்போடவும், ஆட்சேப மனுக்களைத் தாக்கல் செய்யவும் முடியும். ஆனால் உள்ளூராட்சிச சபைகளுக்கான தேர்தல்களில் இப்படியெல்லாம் செய்ய வாய்ப்பு இல்லை. இக் குறைபாடுகளை நீக்கி நீதியும், நியாயமுமான தேர்தலை நடத்துவதற்காகவே உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களுக்கான சட்டத்தில் திருத்தம் கொண்டுவந்துள்ளோம்.

முன்னர் சிறிமா ஆட்சிக் காலத்தில் அவசர காலச்சட்டத்தை பயன படுத்தி உள்ளூராட்சித் தேர்தல்கள் நடத்தப்படாமல் நீண்டகாலம் பிற்போடப்பட்டு வந்தது. தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் ஆசனம் காலி ஆனபோது இடைத் தேர்தல் நடத்தப்படாமல் நீண்ட, நெடிய காலம் இழுத்தடிப்பு நடத்தப்பட்டு வந்தது.

ஆனால இப்போது சட்டபூர்வமான ஜனநாயக முறையில் நேர்மையான தேர்தலை உரிய காலத்தில் நடத்தக் கூடிய அதிகாரம் தேர்தல் ஆணையாளருக்கு வழங்கப்படுகின்றது. நேர்மையான தேர்தலை நடத்தவும் நியாயம்கோரி ஆட்சேபனை செய்யவும் தற்போது முடியும் - என்றார்.(க-ரி)

## புலிகளைத் திருப்திப்படுத்தவே தேர்தல் சட்டத்திருத்தம்

### இப்படிக் கூறுகிறார் நிமால் சிறிபால டி சில்வா

கொழும்பு,பெப்.22

தமிழீழ விடுதலைப் புலிகளின் கோரிக்கையின்பேரிலேயே அரசாங்கம் இன்று உள்ளூராட்சிச் சபைகளின் தேர்தல் சட்டத்தைத் திருத்த முற்பட்டுள்ளது. இதனை மூடி மறைத்துவிட்டு ஊழல்களைத் தடுப்பதற்காகவே புதிய திருத்தங்களைக் கொண்டு வருகிறோம் எனக்கூறுவது ஏற்கமுடியாத ஒன்று என எதிர்க்கட்சி உறுப்பினர் நிமால் சிறிபால டி சில்வா நாடாளுமன்றத்தில் கூறினார்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில புலிகளை சந்தோஷப்படுத்துவதற்காகவே அரசாங்கம் இந்தத் தேர்தல் சட்டத்தில் திருத்தம் ஏற்படுத்தி உள்ளது. இந்தச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டபின் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களைப் பின்போட்டுவிடும் என்பது உறுதி. இதனை ஆளுங்கட்சியினர் வெளிப்படையாக மறுக்கமுடியுமா? என்றும் நிமால் சிறிபால டி சில்வா கேள்வி எழுப்பினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த நாம் முழு ஆதரவையும் வழங்கத் தயார். ஆனால் நாட்டு மக்களையும் நாட்டையும் புலிகளுக்கு அடகு வைக்கும் அரசாங்கத்தின் திட்டங்களுக்கு உடந்தையாக முடியாது.

அதேவேளை, அமைச்சர் ரவூப் ஹக்கீம், புலிகள் இயக்கத்தினர் முஸ்லிம்களைக் கடத்துகின்றனர்; உடைமைகளை நாசப்படுத்துகின்றனர்; கடத்தி வைத்துக் கப்பம் கேட்கின்றனர் எனக் குற்றம் சுமத்துகின்றார்.

தென்பகுதியில் எதிர்க்கட்சி உறுப்பினர்களையும் வேட்பாளர்களையும் சிறைகளில் அடைத்துவைத்துவிட்டே தேர்தலை நடத்துகின்றனர் எனவும் நிமால் சிறிபால டி சில்வா கூறினார்.

## அரசு சமாதானம் என்ற போர்வையில் ஜனநாயகத்தை குழிதோண்டி புதைக்கிறது

### சபையில் நந்தன குணதிலக்க குமுறல்

கொழும்பு,பெப்.22

இன்றைய அரசாங்கம் சமாதான நடவடிக்கை என்று கூறிக்கொண்டு ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைக்கிறது.

- இவ்வாறு குற்றஞ் சுமத்தியுள்ளார் ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் நந்தன குணதிலக்க.

உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்கள் திருத்தச் சட்ட விவாதத்தில் பங்குபற்றி உரையாற்றியபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

அரசு வடக்கு - கிழக்கில் சமாதானத்தை ஏற்படுத்த முயன்றாலும் தமிழீழ விடுதலைப் புலிகள் அங்கே ஜனநாயக நடைமுறைகளை விரும்பவில்லை. இதன் காரணமாகவே அப்பிரதேசத்தில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை நடத்துவதை அவர்கள் தடுக்கின்றனர்.

தொப்பிகலைப் பிரதேசத்தில் புலிகள் பெரிய பயிற்சி முகாம் ஒன்றை நடத்திவருகின்றனர். அங்கே இளைஞர்களும், யுவதிகளும் கட்டாய இராணுவப் பயிற்சிக்கு உள்ளாகி உள்ளனர். இவர்களிடம் இருந்து தப்பி வந்த சிலர் இராணுவத்தினரிடம் சரணடைந்துள்ளனர். எனவே புலிகள் இயக்கம் ஜனநாயகத்தை விரும்புகிறது என்பதனை எவ்வாறு ஏற்கமுடியும்?

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் மட்டும் தேர்தல்களைப் பிற்போடுவதானால், நாட்டை இரண்டாகப் பிரித்துக் கொடுத்து விட்டீர்களா? இப்படி நாட்டை இரண்டுபடுத்தும் இந்தப் பயங்கரமான சட்டத்தை ஜே.வி.பி. முற்றாகக் கண்டிக்கிறது - என்றார். (க-ரி)

## வகுப்புகள்

சுலபமாக ஆங்கிலத்தில் கதைக்கப் பயில ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி DIP./CER IN SCIENCE (LONDON PADDINGTION CAMPUS ENGLAND) 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்; நாகலிங்க சுவாமிகள் வீதி, சங்கானை. (910)

## புத்தகங்கள்

வானொலியில் "எது துரோகம்?" நாடகம் கேட்டீர்களா? அதை எழுதிய அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் பரிசு பெற்ற நாவல் ஒரு காதலின் கதை. இலங்கை இனப்பிரச்சினையின் ஆரம்பகாலத்தைச் சித்திரிப்பது.(927)

## அபூர்வஜோதிடம்

சித்தர்களின் ஏட்டுச் சுவடி மூலம் நோய்களிலிருந்து பூரண விடுதலை யோகம் பெறும் காலத்தை துல்லியமாக அறிதல். சனி, ஞாயிறு 8.30 - 2:00 மணி. ஆடியபாத வீதி, சரஸ்வதி மில்லேன் கொக்குவில் கிழக்கு. (956)

## தவறிவிட்டது

நவக்கிரி, புத்தூர் என்ற முகவரியைச் சேர்ந்த தெய்வேந்திரம் சாந்தகுமார் என்பவருடைய தேசிய அ.அ. (இல.782364308V), விசேட அ.அ. (இல.0903039529) என்பன நவக்கிரிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள மேற்படி விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (949)

இல.663/4, நாவலர் றோட், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அரியநாயகம் ரஞ்சித்தின் தேசிய அ.அ. (இல.822401473V), விசேட அ.அ. (இல.0902032738), பாடசாலை அடையாள அட்டையும் 20.02.2002 அன்று யாழ்.பல்கலைக்கழக சுற்றாடலில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்கூறிய முகவரியில் ஒப்படைத்து உதவவும். (972)

சங்கானை மேற்கு, வடலியடைப்பு, பிள்ளையார் வீதி, பண்டத்தரிப்பு என்ற முகவரியைச் சேர்ந்த சின்னத்துரை கனகமணி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.448091643V), விசேட அடையாள அட்டை (இல.0905013468) என்பன 18.02.2002 அன்று யாழ். நவீன சந்தைப் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (971)

## விற்பனைக்கு

கோவில் வீதி, யாழ்ப்பாணத்தில் இல.73 (43)இல் 9பரப்புக் காணி (சகல வசதிகளும் கொண்ட) வீடு உடன் விற்பனைக்கு உண்டு. மேலும் இக் காணியில் இரண்டு வீடுகள் கட்ட அனுமதிபெற்ற வீட்டு வரைபடங்களும் இருக்கின்றன. தொடர்பு: C.வில்லவராயன், 11, சங்கிலியன் வீதி, யாழ்ப்பாணம். (883)

நல்ல நிலையில் உள்ள வீடியோ புரொஜெக்டர் விற்பனைக்கு உண்டு. உயர் கல்வி நிறுவனங்கள், மினி சினிமாக்களுக்கு ஏற்றது. தொடர்பு: கு.விக்னேஷ், 100,மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (C-20838)

## இசை விழாவுக்கு கலைஞர்கள் விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,பெப்.22

நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தின் இசை விழாவில் நிகழ்ச்சிகளை வழங்கவிரும்பும் கலைஞர்கள் எதிர்வரும் முதலாம் திகதிக்கு முன் விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் 23ஆம் திகதியில் இருந்து 31ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இந்த இசை விழாவில் தமது திறமைகளை வெளிப்படுத்த கலைஞர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாகவும் இளங்கலைஞர் மன்றத்தின் செயலாளர் தெரிவித்தார். (க-6)

## 518 தபால் பொதிகள் எடுத்துவரப்பட்டன

யாழ்ப்பாணம்,பெப்.22

காங்கேசன்துறை துறைமுகத்திற்கு நேற்று வந்துசேர்ந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் நோயாளர் கப்பலில் குடாநாட்டுக்கான வெளியூர்த் தபால்கள் அடங்கிய 518 தபால் பொதிகள் எடுத்து வரப்பட்டுள்ளன.

இதேகப்பலில் குடாநாட்டில் சேகரிக்கப்பட்ட வெளியூர்த் தபால்கள் அடங்கிய 167 தபால் பொதிகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் யாழ்.பிரதம தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (க-6)

---

யா/ பன்னாலை சேர் கனகசபை அ.த.க. பாடசாலை
தெல்லிப்பழை

**மெய்வன்மைப் போட்டி ஒத்திவைக்கப்பட்டுள்ளது**

மேற்படி பாடசாலையில் நாளை (23.02.2002) சனிக்கிழமை நடைபெறவிருந்த மெய்வன்மைப்போட்டி, அன்றையதினம் நடைபெறவிருக்கும் சமாதானப் பேரணி காரணமாக 27.02.2002 புதன்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றேன்.

(983) - அதிபர்.

---

**நல்லூர் பிரதேச செயலக கலாசாரப் பேரவை**
நடத்தும்

**கலாசார விழா - 2002 பிற்போடப்பட்டுள்ளது**

23.02.2002, 24.02.2002 ஆகிய தினங்களில் நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெறவிருந்த மேற்படி நிகழ்வு தவிர்க்கமுடியாத காரணத்தால் 27.02.2002, 28.02.2002 ஆகிய தினங்களில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

கலாசார பேரவை
(973) பிரதேச செயலகம், நல்லூர்.

---

**மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம்**
We Serve
நடத்தும்

**இலவச மருத்துவ முகாம**

இடம்:- சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி
காலம்:- நாளை (23.02.2002) சனி காலை 9.00 மணி முதல்

*சேவையாற்றவுள்ள மருத்துவ குழு:*

*மகப்பேற்று நிபுணர் டாக்டர்* G.பவானி அவர்கள்
*சிரேஷ்ட வைத்திய அதிகாரி லயன் டாக்டர்*K. இரத்தினசிங்கம அவர்கள்
*பற்சிகிச்சை நிபுணர் டாக்டா* A.ஞானமூர்த்தி அவர்கள்

குறிப்பு :- சலரோக சோதனையும் மேற்கொள்ளப்படும்.
சண்டிலிப்பாய் பிரதேச ஆதரவற்ற வறிய மக்களைப் பயன்பெறும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

லயன் Dr. நவமலர் கனகரத்தினம், *கழகத்தலைவர்.*
லயன் S.S.தங்கராசா, சேவைத்திட்டத் தலைவர்.

(C20836)

---

## இரண்டாம் ஆண்டு நீங்கா நினைவலைகள்



தோற்றம் 07 - 08 - 1932
மறைவு 14 - 02 - 2000

அமரர்
**சின்னத்தம்பி சின்னக்குட்டி**

திதி:22.02.2002


அன்பின் ஒளிவிளக்கே!
பாசத்தின் உறைவிடமே!
ஆண்டுகள் இரண்டு புரண்டாலும்
ஆறாதையா உங்கள் நினைவுகள்!
*ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்:*

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*கல்லூரி வீதி,*
*இளவாலை.* (C-20834)

---

## 45ஆவது நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அன்னை மடியில் 14 - 01 - 1997
இறைவன் அடியில் 09 - 01 - 2002

**செல்வன் முருகுப்பிள்ளை அனுசன்**

45நாள்கள் சென்றதையா...
என்றும் ஓயாத உன் நினைவலைகளால்
உன் முத்தான மொழி கேட்டு - உன்
பிரிவால் வாடுகின்றோம்.

இன்று (22.02.2002) வெள்ளிக்கிழமை நிகழும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

பிரிவால் துயருறும்:
பெற்றோர்:- முருகுப்பிள்ளை - பேபி.
சகோதரர்கள்:- அகிலன், யோகன், அரவிந்தன், அயந்தன்.

*குடத்தனை - கிழக்கு,*
*குடத்தனை.* (977)

---

## ப.நோ.கூ. சங்கங்களின் எரிபொருள் நிலையங்களிலும் இன்று முதல் மண்ணெண்ணெய் தேவையான அளவு பெறமுடியும்

யாழ்ப்பாணம்,பெப்.22

யாழ். குடாநாட்டில் உள்ள ப.நோ.கூ. சங்கங்களின் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூலம் இன்று முதல் பொதுமக்களுக்குத் தேவையான அளவில் மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படும் என மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம் அறிவித்துள்ளார்.

இதுவரை காலமும் ப.நோ.கூ. சங்கங்கள் தமது சங்கக் கிளைகள் மூலம் பங்கீட்டு அடிப்படையில் மண்ணெண்ணெயை விநியோகித்து வந்தன.

தற்போது போதியளவு மண்ணெணெயை கொழும்பில் இருந்து எடுத்துவருவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. காங்கேசன் துறையில் அதிகளவில் மண்எண்ணெயைப் சேமித்து வைப்பதற்கும் போதிய வசதிகள் இல்லை. இதனாலேயே மக்களுக்குத் தேவையான அளவில் மண்எண்ணெயை விநியோகிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான அறிவுறுத்தல்கள் யாவும் சம்பந்தப்பட்ட ப.நோ.கூ. சங்கங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை -

குடாநாட்டில் உள்ள எரிபொருள் நிரப்பு முகவர் நிலையங்கள் மூலமும் இன்று முதல் கட்டுப்பாடு இன்றி மண்எண்ணெய் விநியோகிக்கப்படும் - என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-7-180)

## தேர்தல் 'போஸ்டர்'களை பஸ்களில் ஒட்டாதீர்!

கொழும்பு,பெப்.22

தேர்தல் காலங்களில் இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்களின் உட்பக் கத்திலோ வெளிப்பக்கத்திலோ 'போஸ்டர்' ஒட்டுவது தவிர்க்கப்படல் வேண்டும் என்று இலங்கை போக்குவரத்துச் சபைத் தலைவர் யு.எல்.எம்.பாரூக் தெரிவித்துள்ளார்.

கடந்த தேர்தலின் போது தேர்தல் ஆணையாளரினால் அறிவிக்கப்பட்டதிற்கு முரணாக தேர்தல் விதிகளை மீறி பஸ்களில் 'போஸ்டர்'கள் ஒட்டப்பட்டதாகவும் - ஆனால் இனிவரும் தேர்தல்களின் போது இவ்வாறான செயல்களைத் தவிர்த்துக்கொள்ளும்படி அரசியல் கட்சிகளின் பிரதேச ஒழுங்கமைப்பாளர்களிடம் கேட்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.(க-ரி)

## மக்கள் முகம்




திருகோணமலை அன்புவழிபுரத்தைச் சேர்ந்த பர்னாந்து யோசேப் அன்ரனி அண்மையில் உயர்நீதிமன்ற சட்டத்தரணியாக பிரதம நீதியரசர் சரத் என் சில்வா, நீதியரசர் விக்னேஸ்வரன், நீதியரசர் யாப்பா ஆகியோர் முன்னிலையில் சத்தியப் பிரமாணஞ் செய்துகொண்டார்.

இவர் ஆசிரியராகவும், அதிபராகவும் கடமைபுரிந்து இளைப்பாறியவர்.

கரவெட்டி திருஇருதயக் கல்லூரியின் பழைய மாணவரான இவர், நல்லூர் தெற்கு விக்னேஸ்வர வித்தியாலயத்தில் நீண்டகாலம் ஆசிரியராகவும், யாழ்.மத்திய கல்லூரியில் பகுதித் தலைவராகவும், திருகோணமலை விக்னேஸ்வர மகா வித்தியாலயத்தில் பிரதி அதிபராகவும் கடமையாற்றியுள்ளார்.

திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்டபோதும், சிறுவயது முதல் யாழ்.குடாநாட்டில் வாழ்ந்தவர். முன்னாள் நாடாளுமன்ற நியமன உறுப்பினர் எம்.சி.சுப்பிரமணியத்தின் செயலாளராகவும் பணியாற்றியவர். (ஐ)


★ ★ ★



கைதடி தெற்கைச் சேர்ந்த வைத்திய கலாநிதி பொ.சண்முகரத்தினம் கடந்த 09.01.2002 அன்று மேலதிக நீதிவான் திருமதி எஸ்.இளங்கோவன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து, யாழ்.மாவட்டத்திற்கான சமாதான நீதிவானாகப் பதவியேற்றுள்ளார். இவர் 20.09.1961 தொடக்கம் சுகாதாரத் திணைக்களத்தில் இணைந்து பதிவு வைத்திய அதிகாரியாக நாட்டின் பல பாகங்களிலும் மருத்துவ சேவையை ஆற்றியுள்ளார். கடந்த 27.11.1992 ஆம் திகதி தொடக்கம் கைதடி மத்திய மருந்தகத்தில் சேவையாற்றிவரும் இவரது சேவையை தென்மராட்சியின் கைதடி, நாவற்குழி, மறவன்புலோ, தனங்களப்பு, மட்டுவில், நுணாவில் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் பெற்றுவருவது குறிப்பிடத்தக்கது.

சர்வதேச லயன்ஸ் கழகத்தின் மாவட்ட 306B சாவகச்சேரி கிளையில் 1997ஆம் ஆண்டு தொடக்கம் அங்கத்தவராகச் சேர்ந்து மேற்படி கழகத்தினால் நடத்தப்படும் சுகாதாரக் கருத்தரங்குகள், இலவச மருத்துவ சிகிச்சை முகாம்களில் பங்குபற்றி நீரிழிவு சம்பந்தமான நோயியலில் தன்னுடைய வைத்திய சேவையை வழங்கி வருகிறார். (ஐ)

★ ★ ★




புத்தூரைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கொழும்பில் வசிப்பவருமான சண்முகம் கதிரவேலு அண்மையில் கொழும்பு உயர்நீதிமன்ற நீதிபதி எஸ். ஸ்ரீஸ்கந்தராசா முன்னிலையில் இலங்கை முழுவதற்குமான சமாதான நீதிவானாகச் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் 35 வருடங்கள் இலங்கை வானொலி, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் பொறியியலாளராகக் கடமையாற்றி ஓய்வுபெற்றவர். இவர் தமது கல்வியை நெல்லியடி மத்திய கல்லூரியிலும் பின்னர் அச்சுவேலி கிறிஸ்தவ கல்லூரியிலும் பயின்றார். தொழில்நுட்பக் கல்வியை கட்டுபத்தை தொழில்நுட்பக் கல்லூரியிலும் பெற்றுக்கொண்டார்.

இடதுசாரி அரசியல் சிந்தனையை உடைய இவர் தொழிற்சங்க அமைப்புகள் பலவற்றில் இணைந்து ஈடுபட்டவர். (ஐ)

★ ★ ★



யாழ்.மாவட்ட பாடசாலை மட்ட உதைபந்தாட்ட அபிவிருத்திக்கான இணைப்பாளராக சூசைப்பிள்ளை கிளிபேட் அன்ரனிப்பிள்ளை இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

பாசையூரைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகத்தின் சகலதுறை வீரராவார். யாழ் உதைபந்தாட்ட லீக்கின் உப - தலைவராகத் தற்சமயம் பணிபுரியும் இவர் லீக்கின் பொருளாளர், செயலாளர், தலைவர் போன்ற பொறுப்பான பதவிகளையும் வகித்து திறம்படச் செயற்பட்டு வந்தவர்.

சென்.ஜோன்ஸ் கல்லூரியின் பழைய மாணவரான இவர் கல்லூரியின் 'ஜொனியன்ஸ் ஈகிள்' என்ற உயர் விருதைப் பெற்றார். கல்லூரியில் இரண்டாவது வீரராக இவர் அந்த விருதை கைப்பற்றினார்.

1996இல் சென்னையில் நடந்த உதைபந்தாட்டப் போட்டியில் பங்குபற்றிய அகில இலங்கை பாடசாலை அணியில் இவர் இடம்பெற்றிருந்தார். 1972இல் கேரளாவில் நடந்த போட்டியிலும் இவர் பங்கு பற்றினார்.

சிறந்த பயிற்றுநராகவும், நடுவராகவும் இவர் விளங்குகின்றார்.

இவரது சேவையை கௌரவித்து இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் கௌரவ விருது வழங்கியது. (ஐ-3)

# புலிகளின் பகுதிகளில் ஒழுக்கம் பேணுவதில் தமிழீழக் காவல் துறையினர் கூடிய கரிசனை

**"புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் காவல்துறையினரின் சட்டங்கள் நூற்றுக்குநூறு வீதம் நிறைவேற்றப்படுகின்றன. வீதியால் செல்லும் இளம் பெண்களைக் கேலி செய்பவர்களையோ அல்லது கடமையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் காவல்துறையினர் வீண்வம்பு பேசிக்கொண்டிருப்பதையோ காணமுடியவில்லை. ஒழுக்கத்தைப் பேணுவதில் காவல்துறையினர் விசேட கவனம் செலுத்துகின்றனர்." -என்கிறார் வன்னிக்கு விஜயம் செய்த பத்திரிகையாளர் ரஞ்ஜித் ஜயசுந்தர. 17-02-2002 திகதிய 'லங்காதீப' பத்திரிகையில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட அமைக்கப்பட்ட அமைப்புகளில் பொலீஸ் பிரிவு முக்



காவல்துறை அதிகாரி வி.தேவேந்திரம்

கியமான ஒன்றாகும். நாட்டின் சட்டங்களுக்கு மதிப்பளித்து, அதைப் பாதுகாப்பது பொலீஸாரின் பொலீஸாரின் கடமை. அவர்களுக்கான

## ஸ்ரீலங்கா பொலீஸார் வெட்கப்படக்கூடிய திறமையான நீதி, நிர்வாகம் அங்கே!

கட்டளைகளைப் பிறப்பிப்பது அவர்களுக்குப் பொறுப்பான அமைச்சர் அல்லது நாட்டின் பிரதமர் அல்லது



விசாரணைகளை மேற்கொள்ளும் தமிழீழக் காவல்துறையின் பெண் உத்தியோகத்தர்.

நாட்டின் ஜனாதிபதியே.

ஆனால் இவ்வாறான சட்ட ஒழுங்குகளுக்கு அமையாத ஓர் அமைப்பால் நடத்தப்படும் - தீவிரவாத அமைப்பின் தலைவரால் நடத்தப்படும் - பொலீஸ் சேவை என ஒன்று உள்ளது எனக் கூறினால் நீங்கள் ஆச்சரியப்படாமல் இருக்க மாட்டீர்கள். இருப்பினும் அது உண்மையே. மேலும் அந்தப் பொலீஸ் சேவை எமது நாட்டிலேயே நடைபெற்று வருகிறது என்பது மற்றொரு விசேடமாகும்.

நாட்டின் சட்டதிட்டங்களால் அங்கீகரிக்கப்படாத இந்தப் பொலீஸ்சேவை பற்றி அறிய - அவர்களது செயற்பாடுகளைக் கண்டறிய - அண்மையில் எனக்கு ஒரு வாய்ப்புக் கிட்டியது.

அண்மையில், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வன்னிப் பகுதிக்குச் சென்ற வேளையிலேயே இந்த வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

இலங்கைப் பொலீஸின் உத்தியோகபூர்வ அடையாளச் சினத்தை (BADGE) ஒத்த விதத்தில் அமைக்கப்பட்ட அடையாளச் சின்னத்தை அணிந்துள்ள தமிழீழக் காவல்துறையினர் மெல்லிய நீல நிறத்திலான சீருடை அணிந்திருந்தனர். காவல் துறையைச் சேர்ந்த ஆண்களும் பெண்களும் துரிதகதியில் தங்களது கடமைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

### தமிழீழக் காவல்துறை

அவர்களில் எவரது கைகளிலாவது துப்பாக்கிகளைக் காணமுடியவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும். சகல காவல்துறை நிலையங்களிலும் சிறுமுறைப்பாட்டுப்பிரிவு, குற்ற விசாரணைப் பிரிவு மற்றும் விளக்கமறியற் பிரிவு எனப் பல பிரிவுகள் அமைக்கப்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

விடுதலைப் புலிகள் அமைப்பின் நிர்வாகச் செயற்பாடுகள் விரிவடைந்ததைத் தொடர்ந்து காவல்துறையை உருவாக்க வேண்டிய தேவை அவர்களுக்கு உருவானது. அந்தக் காவல் துறையை மேலும் முன்னேற்றகரமாக அமைக்க வேண்டும் எனக் கருதிய புலிகளின் தலைமை, அதிக எண்ணிக்கையானோரைக் காவல்துறையில் சேர்த்துக்கொண்டது. இந்த நடவடிக்கைகள் அனைத்தும் காவல் துறைத் தலைவரான நடேசனிடம் ஒப்படைக்கப்பட்டன.

நடேசன் முன்னர் இலங்கைப் பொலீஸ் சேவையில் இணைந்து மஹரஹம பொலீஸ் நிலையத்தில் பணியாற்றியவர். பின்னர் வடபகுதி சென்று தமிழீழக் காவல்துறையில் இணைந்தார். அதன் காவல்துறைத் தலைவராக நியமிக்கப்பட்டார்.

### நகரங்கள் எங்கும் பணிமனைகள்

நடேசன் தலைமையில் செயற்பட்ட தமிழீழக் காவல்துறை யாழ்ப்பாணத்தில் விடுவிக்கப்படாத பகுதிகள், மட்டக்களப்பு, வவுனியா வடக்கு, முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் தீவிரமாகச் செயற்பட்டது. அனைத்து நகரங்களிலும் காவல்துறைப் பணிமனைகள் அமைக்கப்பட்டு, அந்தப் பணிமனைகளுக்குப் பொறுப்பாக பொலீஸ் இன்ஸ்பெக்டர்கள் நியமிக்கப்பட்டனர்.

இவ்வாறான காவல்துறை பணிமனைகளை இணைத்து காவல்துறை வலயங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அந்த வலயங்களில் காவல்துறையினரின் பணிகளை அவதானிக்க தனியான அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். உதவிப் பொலீஸ் அத்தியட்சகருக்கு (A.S.P.) வழங்கப்படும் கடமைகளுக்குச் சமமான கடமைகளில் ஈடுபடுதல், காவல்துறைப் பணிமனைகளில் உள்ள ஆவணங்களைப் பரிசீலித்தல் மற்றும் காவல் துறை ஊழியர்களின் ஒழுக்க நெறிகளைத் தனிப்பட்ட முறையில் கண்டறிதல் ஆகிய பணிகள் அவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மல்லாவி - துணுக்காய் பிரதேசத்துக்கு அவ்வாறு நியமிக்கப்பட்டுள்ள அதிகாரியான வீ.தேவேந்திரத்தை நான் துணுக்காய் காவல்துறைப் பணிமனையில் சந்தித்தேன். தன்னுடைய காவல்துறைப் பணிகளை பின் வருமாறு அவர் விவரித்தார்:-

"நான் ஐந்து வருடங்களாகக் காவல்துறையில் பணியாற்றுகிறேன். முன்னர் இலங்கைப் பொலீஸ் சேவையில் கடமை புரிந்தேன்.

"1996இன் பிற்பகுதியில் அந்தச் சேவையை விட்டு விலகிக் காவல் துறையில் சேர்ந்தேன்.

"தற்போது இங்கு பிரதான காவல் துறைப் பணிமனைகள் 10 மற்றும் கிளைப் பணிமனைகள் 15 ஆகியன உள்ளன.

"இந்தப் பணிமனைகள் தென் பகுதியில் உள்ள பொலீஸ் நிலையங்களைப் போலவே செயற்படுகின்றன. இருப்பினும் நாங்கள் முறைப்பாடுகளைச் சேர விடுவதில்லை. எந்தவொரு முறைப்பாடும் 2 நாள்களுக்குள் விசாரித்து முடிக்கப்பட்டுவிடும்.

"ஏதாவது காரணத்தால் தீர்வினைக்காண எங்களால் முடியாவிட்டால் அந்தப் பிரச்சினையை எமது நீதிமன்றத்திடம் பாரப்படுத்துவோம்.

"நீதிமன்றங்களில் பணிகள் மிகத் துரிதமாக மேற்கொள்ளப்படுகின்றன. ஓரிரு நாள்களில் வழக்குகள் விசாரிக்கப்பட்டு குற்றவாளிக்குத் தண்

## வீதியால் சென்றுவரும் பெண்களை கேலி செய்வதை காணவே முடியாது

டனை வழங்கப்படும்.

"இங்கு சட்டவிரோதமான மது உற்பத்தி தொடர்பான முறைப்பாடுகள் எவையும் வருவதில்லை.' அதேபோலவே பாலியல் வன்முறை, சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான முறைப்பாடுகளும் வருவதில்லை. எப்போதாவது இவ்வாறான பிரச்சினைகள் உருவானால் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு நாங்கள் கடுமையான தண்டனைகளை வழங்குவோம்" - என அவர் தெரிவித்தார்.

### குற்றங்களுக்கு கடும் தண்டனை

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் கடுமையான தண்டனைகள் விதிக்கப்படும். குற்றச் செயல்களில் முக்கியமான குற்றங்களாக இரண்டைக் கூறலாம். அதில் முதலாவது பாலியல் வன்முறை. இரண்டாவது சிறுவர் துஷ்பிரயோகம்.

இத்தகைய குற்றங்களைச் செய்தோருக்கு விடுதலைப் புலிகள் எதுவித மன்னிப்பையும் வழங்குவதில்லை. பதிலாக அவர்களுக்கு தலையில் சுடப்பட்டு மரணதண்டனை வழங்கப்படும்.

இத்தகைய தண்டனை பொதுமகளுக்கு மாத்திரம் வழங்கப்படுவதில்லை. விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களுக்கும் இது பொருந்தும்.



சிரத்தையுடன் பணியாற்றும் காவல்துறையின் அதிகாரி

### சட்டங்கள் நூறுவீதம் செயற்படுத்தப்படுகின்றன

புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் காவல்துறையின் சட்டங்கள் நூற்றுக்கு நூறுவீதம் செயற்படுத்தப்படுகின்றன. வீதியால் செல்லும் இளம்பெண்களை கேலி செய்பவர்களையோ அல்லது கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் விடுதலைப் புலிகளின் காவல்துறையைச் சேர்ந்த இளைஞர், யுவதிகள் வீண்வம்பு பேசிக் கொண்டிருப்பதையோ காணமுடியவில்லை.

ஒழுக்கத்தைப் பேணுவதில் காவல் துறையினர் விசேட கவனம் செலுத்தி வருகின்றனர். சிறுதவறு செய்தால் கூட அவர் எந்தத் தரத்தில் உள்ளவராயினும் அவர் உடனடியாகவே காவல் துறையினரால் கைது செய்யப்படுகின்றார்.

அதேபோலவே போக்குவரத்துப் பிரிவைச் சேர்ந்த காவல்துறையினரும் செயற்படுகின்றனர். வாகனங்களின் வீதி ஒழுங்கு மற்றும் விபத்துக்கள் குறித்து நடவடிக்கை எடுக்க காவல்துறையில் வாகனப் போக்குவரத்துப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

### காவல்துறையினரின் திருமணம்

புலிகளின் காவல்துறையில் பணியாற்றுவோரில் அதிகமானோர் திருமணமானவர்கள். ஆண் ஊழியர்கள் 29 வயதை அடைந்ததும் பெண் ஊழியர்கள் 24 வயதை அடைந்ததும் திருமணம்செய்ய அனுமதிக்கப்படுகின்றனர். இவ்விதமாகத் திருமணம் செய்த கணவனும் மனைவியும் ஒரே காவல்துறைப் பணிமனையில் வேலை செய்கின்றனர்.

திருமணமானவர்களின் கடமை நேரம் காலை 7.00 மணியில் இருந்து மாலை 6.00 மணிவரையாகும். இரவு 7.00 மணிக்குப் பின்னர் அவர்களது இல்லங்களுக்குச் செல்ல அனுமதி வழங்கப்படுகின்றது.

எவ்வாறாயினும் இவ்வாறான காவல்துறைத் தம்பதியினருக்கு அவர்களது குழந்தைகளுக்கான பணிகளை மேற்கொள்ள நேரம் போதாமல் உள்ளதெனத் துணுக்காய் மற்றும் மல்லாவிப் பகுதிகளில் எம்மைச் சந்தித்து உரையாடிய காவல்துறையைச் சேர்ந்த பெண் ஊழியர்களில் பலர் எம்மிடம் தெரிவித்தனர்.

இந்தப் பெண் ஊழியர்கள் புன்முறுவல் பூத்தவாறு கடமையாற்றுகின்றனர். அவர்கள் பொதுமக்களுடனும், ஏனைய காவல்துறை ஊழியர்களுடனும் இன்முகத்துடன் செயற்படுவதை அவதானிக்க முடிந்தது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலுள்ள அரச மருத்துவமனைகளிலும் காவல்துறையினர் மருத்துவமனைப் பொலீஸ் பிரிவை ஏற்படுத்தியுள்ளனர். இந்த மருத்துவமனைப் பிரிவில் ஓர் ஆண் காவல்துறை ஊழியரும் மூன்று பெண் காவல்துறை ஊழியர்களும் பணியாற்றுகின்றனர்.

அவர்கள் தினமும் தமக்குக் கிடைக்கும் தகவல்களைத் திரட்டி அண்மையிலுள்ள காவல்துறைப் பணிமனைக்கு அனுப்பிவைக்க வேண்டும். அதுவே அவர்களது கடமை.

### நீதிச்சேவை

காவல்துறையின் பணிகளுடன் இணைந்ததாக விடுதலைப் புலிகளின் நீதிச்சேவை செயற்படுகின்றது. விடுதலைப் புலிகளால் நியமிக்கப்பட்ட நீதிபதிகள் அந்த நீதிமன்றங்களில் கடமையாற்றுகின்றனர்.

சிறிய வழக்குகள் ஒரே நாளில் விசாரிக்கப்பட்டு தீர்ப்புகள் வழங்கப்படுகின்றன. பாரதூரமான குற்றங்கள் தொடர்பான வழக்குகள் இரண்டு அல்லது மூன்று தினங்களுக்குள்

**தமிழில் : கஜனி**

இந்த நீதிபதிகளால் விசாரிக்கப்பட்டு தீர்ப்புகள் வழங்கப்படுகின்றன.

குற்றவாளிகளாகக் காணப்படுபவர்களுக்குச் சிறைத்தண்டனை விதிக்கப்படுகிறது. ஆனால் அவர்கள் சிறைச்சாலையில் அடைக்கப்படுவதில்லை. பதிலாக அவர்கள் பொதுப் பண்ணைகளில் பயிர்ச்செய்கைகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர். இந்தப் பணிகளைக் கண்காணிக்கத் தனியான பிரிவு ஒன்றை விடுதலைப் புலிகள் உருவாக்கியுள்ளனர். எவ்வாறாயினும் இப்பிரதேசங்களில் வாழும் இளம் சமுதாயத்தினர்



காவல்துறை உத்தியோகத்தர்

இலங்கைப் பொலீஸாரைப் பற்றி எதுவுமே அறியாத நிலையில் உள்ளனர். அவர்கள் பொலீஸ் சேவை குறித்து அறிந்திருப்பது ஒன்றே ஒன்றுதான். அது தமிழீழ காவல் துறை பற்றி மட்டுமே. காட்டு நீதியாயினும் விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டிலுள்ள பொதுமக்களுக்குப் பணியாற்றி வருகின்றனர். மக்களைக் கட்டுப்படுத்தி வைத்துள்ளனர். அப்பகுதி மக்களும் அந்தக் கட்டுப்பாடுகளை ஏற்று - மதித்து - நடந்து வருகின்றனர். இந்த நிலைமை எதிர்காலத்தில் எவ்வாறு செயல்வடிவம் பெறப்போகிறது என்பதைக் கூறமுடியாமலுள்ளது.

☆

# சேவையும், அர்ப்பணிப்பும் கொண்ட மாண்புறு வாழ்வே சாரணியம்

**சாரணியத்தின் ஸ்தாபகர் போட் பேடன் பவலின் பிறந்த தினமாகிய இன்று உலகளாவிய ரீதியில் உலக சாரணர் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. அதனை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.**

பாடசாலையை கற்றலையும் கற்பித்தலையும் மேற்கொள்வதற்கென வடிவமைக்கப்பட்ட ஒரு பொதுவான இடமெனக் கொள்ளமுடியாது. பாடசாலையில்தான் உள்ளுணர்வுகள் ஒளியூட்டப்பட்டு - தூண்டப்பட்டு - தூய்மையாக்கப்பட்டு வலுவூட்டப்படுகின்றன. இங்குதான் ஒழுக்கம் - கடமை - பக்தி - விசுவாசம் - கீழ்ப்படிவு என்ற விதைகள் விதைக்கப்பட்டு பயன்தருமாறு வளர்த்தெடுக்கப்படுகின்றன.

பிள்ளைகளுக்குக் கல்வியை வழங்குவதற்குப் பெற்றோர் அதிகூடிய கவனம் செலுத்துகின்றனர். ஆனால் மனித மேம்பாடுகள் வளர்த்தெடுக்கப்படவேண்டும் என்பதில் அவர்கள் கவனம் செலுத்துவதில்லை. ஆனால் இற்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த போட் பேடன் பவல் அன்றே உணர்ந்து பள்ளி மாணவர்களுக்கு அளித்த அரும்பெரும் பொக்கிசமே 'சாரணியம்' ஆகும்.

இங்கிலாந்து நாட்டிற் பிறந்து இராணுவத்தில் சேர்ந்து மேஜர் ஜெனரல் வரை பதவியுயர்வுபெற்ற போட் பேடன் பவல் தான் வெவ்வேறு நாடுகளில் பெற்ற யுத்த அனுபவங்கள், மக்களின் வாழ்க்கை முறைகள் என்பனவற்றை அடிப்படையாகக்கொண்டு இச்சாரணியத்தை உருவாக்கினார்.

மாணவர்கள் உள, உடல் வளர்ச்சி பெறுகின்ற பள்ளிப்பிராயத்திற் தாமாகவே விரும்பி நாட்டத்துடன் ஈடுபடுகின்ற உள, உடல் இயக்கப் பண்புகளை அடிப்படையாகக்கொண்டு சாரணியப் பயிற்சி வழங்கப்படுகிறது.

இப்பயிற்சிகளினூடாக சாரண விருதுகளைப்பெறுவதோடு மனித மேம்பாடுகளாகிய சேவை செய்தல் - கீழ்ப்படிதல் - கடமையைச் செய்தல் - கண்ணியம் - கட்டுப்பாடு - விசுவாசம் - திட்டமிடல் - ஒழுங்கமைத்தல் - நேரம் தவறாமை - பிறர்க்கு உதவி செய்தல் - பொறுப்புணர்வு போன்ற இன்னோரன்ன விடயங்களைக் கைக்கொள்ள பயிற்சியளிக்கப்படுகிறது.

**ஆ.ஜெகநாதன்,**
மாவட்ட சாரண ஆணையாளர்,
பருத்தித்துறை.

ஒரு மாணவனை ஒரிரு மாதங்களிலோ அல்லது ஒரிரு வருடங்களிலோ சாரணன் ஆக்கிவிடமுடியாது. இது பள்ளியில் அவன் வாழும்காலம் வரை தொடராக அவதானிக்கப்பட்டு அளிக்கப்படும் பயிற்சிகளின் அடிப்படையிலேயே அதன் வெற்றி தங்கியுள்ளது. தனது 18 வயதைப் பூர்த்தி செய்யமுன் படிப்படியாகப் பல சாரண விருதுகளைப் பெற்று அதியுயர்விருதாகிய ஜனாதிபதி விருதை மதிப்புக்குரிய ஜனாதிபதி யின் கையால் நேரடியாகப்பெறும் வாய்ப்பைப் பெறுவான். இத்தகைய விருதைப் பெறும் சாரணன் தனது ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குப் பெற்ற புள்ளிகள் போதாதவிடத்து மேலதிக புள்ளிகளாகப் பத்துப் புள்ளிகள்பெற்றுப் பல்கலைக்கழக அனுமதியைப் பெறும் வாய்ப்புக்களும் உண்டு.

விளையாட்டுக்கள், பாட்டுக்கள் என்பவற்றோடு மனமகிழ்வெய்தும் சாரணன் இயற்கை வனப்புக்கள் நிறைந்த இடங்களிற் கூடாரம் அமைத்துத் தானே சமைத்துண்டு, இயற்கை கற்பிக்கும் பாடங்களையும் இயற்கையின் அழகையும் பறவைகள், மிருகங்கள் என்பனவற்றின் வாழ்க்கை முறைகளையும் உற்று அவதானித்து பல வாழ்க்கைப் பாடங்களைக் கற்பதோடு ஆனந்தமும் அமைதியும் பெறுவான். முதலுதவிப் பயிற்சிகளைப்பெற்று சமூக இடர்களைக் களைவான். உயிர்காக்கும் உதவியாளனாகிய சாரணன் தன் வாழ்நாள் முழுதும் சாரணனே. ★

---


## அன்புடன் வாழ்த்துகின்றோம்



## திரு. சி. சண்முகராஜா

*(பிரதி அதிபர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை)*

ஆசிரிய கலாசாலையில் அளப்பெரிய கலைகளை
அறிவுடன் புகட்டி அற்புத ஆசிரியர்களை
உலகிற்கு அறிமுகப்படுத்திய உத்தமனாம் – எங்கள்
சித்திரக்கலை விரிவுரையாளர்!
கலாசாலையின் விரிவுரைக்காலத்தை – இனிதே
நிறைவுறும் – இந்நாளில் – இதய மகிழ்வோடு
வாழ்த்துகின்றோம்......!

சித்திரநெறி விரிவுரையாளர்,
சித்திரநெறி 1ஆம், 2ஆம் வருட
ஆசிரிய மாணவர்கள்.

(991)



## பனை அபிவிருத்திச் சபை
### புழுக்கொடியல், பச்சை ஒடியல் கொள்வனவு

**தரமான புழுக்கொடியல், ஒடியல் நியாயமான விலையில் பனை அபிவிருத்திச் சபையால் கொள்வனவு செய்யப்படுகின்றன. விரும்புவோர் மாதிரிகளுடன் தொடர்புகொண்டபின் வழங்கவும்.**

*தொடர்பு:-*
*சந்தைப்படுத்தும் பகுதி,*
*பனை அபிவிருத்திச் சபை,*
*இல.859, ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

பொ.சிவபாதம்,
தலைவர், தலைமையகம்,
பனை அபிவிருத்திச் சபை,
இல.53, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(C-20843)


## மரண அறிவித்தல்

### திருமதி சோமசுந்தரம் செல்லம்மா

**(விளானை, களபூமி, காரைநகர்)**

காரைநகர், களபூமி, விளானையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சோமசுந்தரம் செல்லம்மா அவர்கள் 20.02.2002இல் காலமானார்.

அன்னார் ஆறுமுகம் சோமசுந்தரம் (இளைப்பாறிய வைத்திய அதிபர்) அவர்களின் மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கமுத்து தம்பதிகளின் மகளும் காலஞ்சென்ற ஆறுமுகம் - வள்ளியம்மை தம்பதிகளின் மருமகளும் திருமதி சரஸ்வதி மாணிக்கவாசகர், மகாதேவன், சகாதேவன், குணசிங்கம், அமிர்தசிங்கம், தர்மலிங்கம் ஆகியோரின் சகோதரியும் சந்திரகுமாரி, பாலேந்திரன், சுரேந்திரன், காலஞ்சென்ற ஜெயகுமாரி, ரவீந்திரன் ஆகியோரின் தாயாரும் இரத்தினராசா, சந்திரகுமாரி, சாந்தகுமாரி, வசந்தகுமார், சாந்தி ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (21.02.2002) வியாழக்கிழமை கொழும்பில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

*354/7, பருத்தித்துறை றோட்,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
சோ.சுரேந்திரன் (மகன்)

(999)

## களவாக கள் விற்ற 6 பேருக்கு எச்சரிக்கை!

யாழ்ப்பாணம்,பெப்.22

சட்டவிரோதமான முறையில் கள் விற்பனை செய்த 6 பேருக்கு எதிராக நேற்று யாழ்ப்பாண மதுவரிப்பரிசோதகர்களால் யாழ்.நீதிவான் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது.

குற்றவாளிகள் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா கடுமையாக எச்சரித்து அவர்களை விடுதலை செய்தார்.

## கலந்துரையாடல்கள்

தென்மராட்சி,பெப்.22

பச்சிலைப்பள்ளி மக்கள் நலன் காக்கும் கழகத்தினர் பிரதேசத்தில் உள்ள ஆலயங்களின் விவரங்கள் பற்றிய தகவல்களை திரட்டுவது தொடர்பான கலந்துரையாடல் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 930 மணிக்கு புலோலியில் இயங்கும் பளை மத்திய கல்லூரி மண்டபத்தில் நடத்தவுள்ளனர்.

இப்பிரதேசத்தில் உள்ள ஆலயங்களின் பரிபாலன சபையினர் அல்லது தர்மகர்த்தா அல்லது பூசகர் ஆகியோரையும் கழகத்தின் செயற்குழு உறுப்பினர்களையும் இக்கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு கழகச் செயலாளர் து.திரவியரத்தினம் கோரியுள்ளார். (ஒ-117)

★ ★ ★

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட முன்பள்ளி ஆசிரியருக்கான கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பிரதேச சபை முன்பள்ளி மண்டபத்தில் யாழ். பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் ரீ.வீ.கிருஷ்ணசாமி தலைமையில் நடைபெறவுள்ளது.

முன்பள்ளி ஆசிரியர்களுக்கான மாதாந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவு பற்றி கலந்துரையாடவுள்ளதால் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட முன்பள்ளிகளின் ஆசிரியரைக் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-117)

## இயேசுவே உனக்கும் சோதனையா?

**தவக்காலச் சிந்தனை**

**பத்தாம் நாள்**

இயேசுவுக்கும் சோதனையா? நாம் பலமுறை இயேசுவுக்கு ஏற்பட்ட சோதனை என்னும் போது, விவிலியத்தில் கூறப்படுகின்ற 'பாலை நிலத்தில் இயேசு அலகையினால் சோதிக்கப்பட்டார்' (லூக்.4:1-13) என்பதுதான் முதலில் நினைவுக்குவரும்.

சோதனைகள் இயேசுவோடு முடிந்துவிட்டதொன்றல்ல. இன்று எம்மொவ்வொருவருக்கும் எண்ணிறைந்த சோதனைகள், உறவுகளில் சோதனை, உணர்வுகளில் சோதனை, உயிர்கொடுத்து உலகினைக் காக்கும் உயிர்த்தியாகிகளுக்கும் சோதனை. நாம் வாழுகின்ற நாளாந்த கிறிஸ்தவ வாழ்விலும் பல சோதனைகள். அயலவரை அன்பு செய்ய முடியாமல், மன்னித்து ஏற்றுக்கொள்ளமுடியாமல், சகோதரத்துவத்தை மதிக்கமுடியாமல், உண்மைக்கும் நீதிக்கும் குரல்கொடுக்க முடியாமல், உறவுகளுக்காய் உயிர்த்தியாகம் செய்ய முடியாமல் பல சோதனைகள். அவற்றால் பல வேதனைகளும் கூடவே வந்துவிடுகின்றன.

மொத்தத்தில் கிறிஸ்தவ வாழ்வே ஒரு போராட்டம் நிறைந்த வாழ்வு. அது புனிதத்துக்கான போர். இதில்தான் பல சோதனைகளும் வேதனைகளும். இந்த சோதனைகளுக்கும் வேதனைகளுக்கும் பொருள்காண இந்தப் புனிதமான காலத்தைப் பயன்படுத்த வேண்டும். பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே, எல்லாரும் என்னிடம் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்' (மத்.11:28) என்று அழைக்கும் இயேசு தம்மிடம் வருபவர்களுக்கு ஆறுதல் அளிக்கின்றார். 'அவர்கள் என்னை நோக்கி மன்றாடும்போது அவர்களுக்குப் பதிலளிப்பேன்; அவர்களது துன்பத்தில் அவர்களோடு இருப்பேன்; அவர்களைத் தப்புவித்து அவர்களைப் பெருமைப் படுத்துவேன். நீடிய ஆயுளால் அவர்களுக்கு நிறைவளிப்பேன்; என் மீட்பை அவர்களுக்கு வெளிப்படுத்துவேன்'. (தி.பா.91:15-16) எனவே இந்தப் புனிதமான நாள்களில் ஆண்டவரை நோக்கி கூவியழைப்போம்.

*கொழும்புத்துறை* **எஸ்.பிரான்சிஸ்**

## கண்ணீர் அஞ்சலி

யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை ஆசிரியை
செல்வி மு.ஜெயராணி அவர்களின் ஆசை அப்பா

### அமரர் முத்தையா கந்தையா

அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

பாடசாலைச் சமூகம்,
யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை.

(988)

## மரண அறிவித்தல்கள்

### கந்தசாமி நடராசா

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி நடராசா நேற்று (21.02.2002) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் விஜயலட்சுமியின் அன்புக் கணவரும் விஜயலதா, விஜயரூபி, சிறிகுகன், சிவகுகன் ஆகியோரின் பாசமிகு பெரியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (21.02.2002) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கே.கே.எஸ்.வீதி,*
*உடுவில் கிழக்கு,*
*சுன்னாகம்.*

தகவல்:
ந.விஜயலட்சுமி
(மனைவி)

(996)

### திருமதி சிற்றம்பலம் கமலவேணி

வீரவாணி புத்தூரைச் சேர்ந்த திருமதி சிற்றம்பலம் கமலவேணி நேற்று (21.02.2002) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சிற்றம்பலம் (வீதி பராமரிப்பு ஒப்பந்தகாரர், வீ.அ. அதிகார சபை) அவர்களின் அன்பு மனைவியும் சிவராணியின் (வீதி அபிவிருத்தி அதிகார சபை) அன்புத் தாயாரும் சற்குணேஸ்வரனின் (வீதி அபிவிருத்தி அதிகார சபை) அன்பு மாமியாரும் கார்த்திகாவின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற நவரத்தினம், கணேசலிங்கம் ஆகியோரின் சகோதரியும் தானையா, அழகம்மா, நவரட்ணம் (வீதி பராமரிப்பு ஒப்பந்தகாரர்), நவமணி, மகேஸ்வரி, கனகசபை, இராசையா, பரமேஸ்வரி, கமலாதேவி ஆகியோரின் மைத்துனியும் இந்திராணி யோகராசா, பரமானந்தராசா, ரஞ்சனிதேவி, சுசிலாதேவி, லக்குணேஸ்வரி, கோமளாதேவி, குலதவராசா, செல்வராணி, ஜெயராதிகா ஆகியோரின் சிறிய தாயாரும் ஜெயதிலகராணி, கோபாலசூரியன், திரவியநாயகம், ஸ்ரீரதி, ரவி, காயத்திரி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (23.02.2002) சனிக்கிழமை திருநெல்வேலி இல்லத்தில் காலை 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.47, ஆடியபாதம் வீதி,*
*திருநெல்வேலிச் சந்தி.*

தகவல்:
ந.சிற்றம்பலம்
(கணவர்)

(997)

### செல்லையா வன்னியசிங்கம்

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் பிறவுண்வீதி, கொக்குவிலைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா வன்னியசிங்கம் நேற்று (21.02.2002) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பாக்கியத்தின் அன்புக் கணவரும் கமலராணி, யோகராணி (கொழும்பு), பாக்கியராஜன் (கனடா), ஜெயராணி (லண்டன்), கிருபராணி (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் காலஞ்சென்ற சிவபாதம், தர்மசீலன், சந்ரா, ஸ்ரீகுகன் ஆகியோரின் அன்பு மாமனாரும் சபிதா (சிங்கப்பூர்), ரஞ்சீத்தா (யாழ்.மருத்துவபீடம்), பிரியந்தா (கொழும்பு), வனிதா (மருத்துவக்கல்லூரி - லண்டன்), அர்ச்சனா, அச்சுதன், அம்புஜா (கனடா) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (22.02.2002) வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் பிறவுண் வீதி, கொக்குவிலில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*பிறவுண் வீதி,*
*கொக்குவில்.*

தகவல்:
சி.கமலராணி
(மகள்)

(995)

## தமிழினமே பாதயாத்திரைக்கு அணிதிரள்க!

# எமது சமாதான ஆவலைக் கண்டு சர்வதேச சமூகம் விழித்தெழட்டும்

## இந்துமத குருமார் ஒன்றியம் அழைப்பு

யாழ்ப்பாணம்,பெப்.22

மதவேறுபாடற்ற தமிழினத்தின் ஒற்றுமையான சமாதான ஆர்வத்தை - ஆவலை - வெளிப்படுத்தும் பாத யாத்திரை சர்வதேச உலகத்தையும் விழித்தெழ வைக்கட்டும். அதற்காக குடாநாட்டு மக்களே இந்தப் பாத யாத்திரையில் அணி,அணியாக வந்து பங்குகொள்ளுங்கள்.

இவ்வாறு நாளை சனிக்கிழமையும், நாளைமறுதினம் ஞாயிற்றுக் கிழமையும் நடைபெறவுள்ள "சமாதானத்திற்கான சர்வமத பாதயாத்திரைக்கு" ஆதரவு தெரிவித்து சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் இந்த அழைப்பை விடுத்துள்ளது.

சர்வமதத் தலைவர்கள், மனித நேய அமைப்புக்களின் ஒன்றிய அனுசரணையுடன் மேற்கொள்ளும் இந்தச் சமாதான யாத்திரை தொடர்பாக மேற்படி ஒன்றியம் அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இன்றைய சூழ்நிலையில் ஈழத்திருநாட்டிலே பூரண அமைதியோடு கூடிய நிரந்தர சமாதானத்தையே அனைவரும் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர். கொடிய யுத்தமும் அதனால் விளைந்துகொண்டிருக்கும் பேரனர்த்தங்களும் தாங்கொணாத் துயரங்களும் முற்றுமுழுதாக அகன்றுவிடவேண்டும் என்பதே அனைவரதும் பிரார்த்தனையாகும்.

ஒருமித்த குரலில் செய்யப்படுகின்ற இந்தப் பிரார்த்தனையின் விளைவாக இப்போது நம்பிக்கையின் ஒளிக்கீற்று ஒன்று தென்படுகின்றது. கடந்த சில மாதங்களாகக் கடைப்பிடிக்கப்படும் மோதல்தவிர்ப்பு மற்றும் யுத்தநிறுத்தமும் அதனைத் தொடர்ந்த செயற்பாடுகளும் ஓரளவு தெம்பினை ஊட்டுகின்றன.

முன்பு பல தடவை நடைபெற்றதைப் போல ஏமாற்றத்தைத்தராமல் இம்முறை நிரந்தரத் தீர்வை எவ்விதமேனும் கண்டுவிடவேண்டும் என்பதை வலியுறுத்தவும் சமாதானத்தின் அவசியத்தை எல்லோரும் உணர்கின்றனர் என்பதைச் சம்பந்தப்பட்டவர்களுக்கும் அகில உலகத்தவர்களுக்கும் காட்டுவதற்காகவும் மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெறுகின்ற இந்த சமாதானப் பேரணி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகும்.

இந்தச் சமாதானப் பேரணி சின்னமடு மாதாவின் முன்னிலையில் ஆரம்பமாகித் தெல்லிப்பழை துர்க்கையம்மனின் முன்னிலையில் நிறைவுபெறுவது மிகப்பொருத்தமானது. மதவேறுபாடற்ற தமிழினத்தின் ஒருமித்த குரல் இது என்பதை உணர முடியும்.

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தின் சார்பில் பெரும் எண்ணிக்கையான இந்துமத குருமாரும் இப்பேரணியில் கலந்துகொண்டு தமது உணர்வுகளை வெளிப்படுத்த வேண்டும் என நாம் வேண்டிக்கொள்வதோடு அனைத்துத் தமிழ் மக்களும் தமது பங்களிப்பை நல்குவார்கள் என்ற நம்பிக்கையுடன் நிலையான சமாதானத்துக்காகக் குரல்கொடுக்கும் இச்சமாதான யாத்திரைக்கு எமது மனப்பூர்வமான ஆதரவைக் கூறுகின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இந்துப் பேரவையும் முழு ஆதரவு

இந்த யாத்திரைக்கு ஆதரவு தெரிவித்து வட பிரதேச இந்துப் பேரவை விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சமாதானத்துக்கான சர்வமத பாதயாத்திரைக்கு இந்துக்கள் அனைவரும் தங்கள் ஆதரவை வழங்க கடமைப்பட்டுள்ளனர். பாத யாத்திரையில் பங்குபற்றத்தவறுவோர் இரு தினங்களிலும் காலை 8 மணிக்கு அல்லது மாலை 5 மணிக்கு தத்தமது இல்லங்களில் நின்றவாறு இரு நிமிட நேரம் இறைபிரார்த்தனையில் ஈடுபடுவதுடன் நிரந்தர சமாதானத்தை அரசும் விடுதலைப் புலிகளும் விரைவில் ஏற்படுத்த இறைவனைப் பிரார்த்திக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நிரந்தர சமாதானத்தின் மூலம் இயல்பு வாழ்க்கை ஏற்படவும் - இந்து வழிபாட்டுத்தலங்களிலும் ஏனைய மத வழிபாட்டுத் தலங்களிலும் நித்திய பூஜைகள் ஒழுங்காக நடைபெறவும் - நாம் அனைவரும் சமாதானத்துக்கான பாதயாத்திரையில் கலந்து ஒவ்வொருவரினதும் பங்களிப்பையும் வழங்குவோமாக - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-9-ரி)

## சாய்ப்புச் சட்டத்தை மீறி

# விடுமுறையில் கடை திறப்பது குறித்து யாழ்.ஊழியர் சங்கம் கடும் விசனம்

யாழ்ப்பாணம்,பெப்.22

யாழ்நகர வர்த்தகர்களில் சிலர் சாய்ப்புச் சட்டத்துக்கு விரோதமாக வர்த்தக விடுமுறை நாள்களில் வர்த்தக நிலையங்களை திறப்பதுடன் ஊழியர்களை பணிக்கு வரவழைப்பது குறித்து வர்த்தக ஊழியர் சங்கம் கடும் விசனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அச்சங்கம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாவது:-

நாட்டின் தற்போதைய சூழ்நிலையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி வர்த்தகர்கள் சிலர், சாய்ப்புச் சட்டத்தையும் மீறி சனிக்கிழமைகளில் 2 மணிக்குப் பின்னரும் ஞாயிற்றுக்கிழமைகள் மற்றும் விடுமுறை தினங்களிலும் தங்கள் வர்த்தக நிலையங்களைத் திறந்து வியாபாரம் செய்துவருகின்றனர். இதனால் அவ்வர்த்தக நிலையங்களில் பணியாற்றும் ஊழியர்கள் விடுமுறை இன்றிப் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

இது தொடர்பாக யாழ்.வர்த்தக ஊழியர் சங்கம், யாழ்.வணிகர் கழகம், யாழ்.மாவட்ட தொழில் திணைக்களம போன்றவை விடுமுறை நாள்களில் வர்த்தக நிலையங்களை மூடி ஊழியர்களுக்கு விடுமுறை வழங்குமாறு பல தடவைகள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

எனினும் சில வர்த்தகர்கள் அதனை உதாசீனம் செய்துவருகின்றனர். இது எமக்கு மிகுந்த விசனத்தை அளிக்கிறது.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக யாழ். வர்த்தக ஊழியர் சங்கத்தின் பிரதிநிதிகள் யாழ். சிவில் நிர்வாக அதிகாரியை கடந்த சனிக்கிழமை சந்தித்து முறையிட்டதாகவும் -

சிவில் நிர்வாக அதிகாரி உரிய நடவடிக்கை எடுப்பதாக சங்கப் பிரதிநிதிகளிடம் உறுதியளித்ததாகவும் - தெரிவிக்கப்பட்டது. (ஒ-9)

# புலிகளின் சமாதான ஆர்வம் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது

## பல்கலை பிக்குமார் சம்மேளனம் கருத்து

கொழும்பு,பெப்.22

சமாதான முயற்சிகளில் விடுதலைப் புலிகள் காட்டிவரும் ஆர்வம், விசுவாசம் குறித்து தமக்கு சந்தேகம் எழுந்துள்ளதாக பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான பிக்குமார் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

அந்தச் சம்மேளனத்தின் தலைவர் றோஹண இந்திரபால தேரர் - தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தமது சம்மேளனம் முழுமையான ஆதரவு வழங்குவதாகவும் - அதனைத் தாம் எந்த வகையிலும் மறுக்கவில்லை எனவும் - தெரிவித்திருக்கிறார்.

விடுதலைப் புலிகள், சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவரும் காலத்தை தம்மைத் திடப்படுத்திக் கொள்வதற்குப் பயன்படுத்துவதில் ஆர்வம் காட்டிவருவதாகத் தெரிகிறது. இதனால் அரசாங்கம் விரைவில் பெரும் இழப்புகளைச் சந்திக்க நேரிடலாம் என்றும் - அவர் எச்சரித்திருக்கிறார். (க-4)

### துடுப்பாட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,பெப்.22

யாழ். மாவட்ட பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடத்தப்பட்டுவரும் துடுப்பாட்டச் சுற்றுப்போட்டியில் நாளையும், நாளை மறுதினமும் இடம்பெறவிருந்த ஆட்டங்கள் எதிர்வரும் 25ஆம், 26ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளையும், நாளைமறுதினம் இடம்பெறவுள்ள சமாதானப் பாதை யாத்திரைக்கு ஆதரவு வழங்கியே இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளது. என்றும் தெரிவிக்கப்பட்டது. (3)

### கைதான இளைஞரை மேல் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்த பணிப்பு

தென்மராட்சி,பெப்.22

சாவகச்சேரி கச்சாய் வீதிப் பகுதியிலிருந்து மிதிவெடியினை கடத்தி வந்ததாகக் கூறி படையினரால் பிடிக்கப்பட்டு யாழ். சிறைச்சாலையில் கடந்த ஆறுமாதங்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ள ரி.அனஸ்ரின் என்ற அந்த இளைஞரை யாழ். மேல்நீதிமன்றில் ஆஜர் செய்யுமாறு சாவகச்சேரி நீதிமன்ற பதில் நீதிவான் பொலீஸாரைப் பணித்ததாக நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-117)

ராஜா யாழ்ப்பாணம்
பிரசாந்த், ஷாலினி, மணிவண்ணன்
பிரியாத வரம் வேண்டும்
தினசரி: 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு: 10.30, 2, 5 (பு.நே.)
24ஆம் திகதிமுதல் ராசி
(C/20786)

நாகம்ஸ் சுன்னாகம்
விஜயகாந்த் (இருவேடம்), சௌந்தர்யா, வடிவேல், வடிவுக்கரசி நடிக்க
தவசி
காட்சிகள்: 11.00, 3.00 (புதிய நேரம்)
(985)

நிறைஞ்சனாஸ் சங்கானை
விவேக், வடிவேலு, குஷ்பு நடிக்க
விரலுக்கேத்த வீக்கம்
காட்சிகள்: 11.00, 2.30, 5.30 (பு.நே.)
(C-20787)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,பெப்.22

தெல்லிப்பழை, பன்னாலை சேர் கனகசபை அ.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் எதிர்வரும் 27 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 1 மணிக்கு அதிபர் நா.ஆனந்தராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்கு பிரதமவிருந்தினராக யாழ்.பல்கலைக்கழக பதிவாளர் திருமதி நாகேந்திரராணி தங்கராஜாவும், சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழைக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் கா.சந்திரபாலனும் கலந்துகொள்வர். (ஒ-8)

★ ★ ★

யாழ்.அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலய வருடாந்த இல்ல மெய வன்மைப் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு பாடசாலை அதிபர் சி.சிறீஸ்கந்தராஜா தலைமையில் பாடசாலை மைதானத்தில் இடம்பெறுகிறது. (ஒ)

★ ★ ★

நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலய இல்லமெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு, சென்நீக்கலஸ் விளையாட்டு மைதானத்தில் அதிபர் க.செபஸ்தியாம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ்ப்பாணக் கோட்டக்கல்வி அதிகாரி ஆ. இராஜகோபால் சிறப்பு விருந்தினர்களாக வைத்தீஸ்வராக் கல்லூரி அதிபர் நா.வன்னியசிங்கம், நாவாந்துறை பங்குத்தந்தை அருட்திரு. பீற்றர் துரைரட்ணம் அடிகளார், நாவாந்துறை நல்லாயன் கன்னியர் மடத்தலைவி அருட்சகோதரி சகாய மரியா ஆகியோரும் கலந்துகொள்வர் (க-4)

★ ★ ★

கோப்பாய் கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட பாடசாலை அணிகளுக்கிடையில் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க மகாவித்தியாலய ஆடுகளத்தில் நடத்தப்படும் வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று காலை 8.30 மணிமுதல் இடம்பெறும் ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

### பெண்கள்

✳ 15 வயதுக்குட்பட்டோர் பிரிவு - புத்தூர் சோமஸ்கந்தா எதிர் ஆவரங்கால் நடராஜா இராமலிங்கம் ம.வி.

✳ 15 வயதுப்பிரிவு - சிறுப்பிட்டி அ.த.க பாடசாலை எதிர் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி.

✳ 17 வயதுப் பிரிவு - உரும்பிராய் இந்துக் கல்லூரி எதிர் அச்சுவேலி மத்திய கல்லூரி.

✳ 19 வயதுப் பிரிவு - புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி எதிர் உரும்பிராய் இந்துக் கல்லூரி.

### ஆண்கள்

✳ 17 வயதுப் பிரிவு - ஆவரங்கால் நடராஜா இராமலிங்கம் ம.வி. எதிர் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி.

✳ 17 வயதுப் பிரிவு - கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி எதிர் இடைக்காடு ம.வி.

✳ 19 வயதுப் பிரிவு - கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி எதிர் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி.(ஒ-3-180)

### பருத்தித்துறை அபிவிருத்தித் தொண்டருக்கு!

தென்மராட்சி,பெப்.22

பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவில் தொழிற் பயிற்சிபெற்ற முதலாம் கட்ட அபிவிருத்தித் தொண்டர்கள் அனைவரும் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு பூலோலியில் உள்ள தொழிற் பயிற்சி நிலையத்திற்கு வருகைதருமாறு அபிவிருத்திப் பரிசோதகர் ரி.விஜயகுமார் கேட்டுள்ளார். (ஒ)

## உடன்பாட்டின் இறுதி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாக நடைமுறைப்படுத்தும் வழிமுறைகளும், கண்காணிப்பு ஒழுங்குகளும் செயல்வடிவம்பெறும். இருதரப்பும் இணங்கிய இப்போர்நிறுத்த உடன்பாடு இம்மாதம் 24 ஆம் திகதிக்கு முன்னர் நடைமுறைக்குவரும்" என்று குறிப்பிட்டார் அன்ரன் பாலசிங்கம்.

போர்நிறுத்த உடன்பாட்டிலுள்ள விதிகள், நடைமுறைகள், இணக்கப்பாடுகள் பற்றி எதுவுமே குறிப்பிட மறுத்த புலிகளின் ஆலோசகர், இருதரப்பு தலைமைகளும் உடன்பாட்டில் கைச்சாத்திட்ட பின்னரே போர்நிறுத்த ஆவணம் பொதுமக்களுக்குத் தெரியப்படுத்தப்படும் - என்றார்.

"இந்த உடன்பாடு வெறும் அமைதி பேணும் ஆவணமாக மட்டும் அமையப் பெறவில்லை. இப்போர்நிறுத்த உடன்பாட்டில் தமிழீழ மக்களின் அன்றாடப் பிரச்சினைகளும் அவற்றின் தீர்வுகளும் முக்கிய அம்சங்களாக இணைக்கப்பட்டுள்ளன. பொருளாதாரத்தடைநீக்கம், அத்தியாவசியப் பொருள்களின் விநியோகம், பாதைகள் திறப்பு, பொது சனப் போக்குவரத்து, மீன்பிடித் தடைநீக்கம் ஆகிய பிரச்சினைகளும் அவற்றிற்கான தளர்வுகளும் தீர்வுகளும் போர்நிறுத்த நடைமுறைகளோடு சேர்க்கப்பட்டுள்ளன. சில பிரச்சினைகள் - குறிப்பாக மீன்பிடித் தடைநீக்கம் - போர்நிறுத்தம் நடைமுறைக்குவரும் நாளிலிருந்து - ஒரு கால அட்டவணையின் அடிப்படையில் தீர்த்து வைப்பதற்கு அரசாங்கம் இணங்கியிருக்கிறது" என்று விளக்கினார் பாலசிங்கம்.

### பிரபாவே ஒப்பமிடுவார்

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சார்பில் அதன் தலைவர் திரு.வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் போர்நிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவார் எனத் தெரிவித்த திரு.பாலசிங்கம், எப்போது இக் கைச்சாத்து வைபவம் நிகழும் என்பது பற்றிக் குறிப்பிட மறுத்துவிட்டார். "இன்னும் 24 மணி நேரத்தில், எல்லா விவரங்களும் எல்லோருக்கும் தெரியவரும் என்றும் மட்டும் சொல்லமுடியும் எனக் குறிப்பிட்டார்.

அரசியற் பேச்சுக்கள் மார்ச் மாதம் நடுப்பகுதியில் ஆரம்பமாகலாம் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியிருப்பது பற்றி வினவியபோது -

பேச்சுக்கள் அவ்வளவு சீக்கிரமாக ஆரம்பமாவது சாத்தியமில்லை - என்றார் பாலசிங்கம். அரசியல் பேச்சுக்கள் ஆரம்பமாவதற்கு முன்னர் விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்படுவது அவசியம் என்றார் அவர்.

பேச்சுக்களை எங்கு நடத்துவது என்பது பற்றி இன்னும் முடிவு எடுக்கவில்லை எனத் தெரிவித்த பாலசிங்கம், புலிகளின் கோரிக்கை குறித்து இந்திய மத்திய அரசு இன்னும் மௌனம் சாதிப்பது தமக்கு ஏமாற்றத்தைத் தருவதாகச் சொன்னார். "நோர்வேயின் சமரச முயற்சிக்கு முழு உலகமும் முனைப்போடு ஆதரவு வழங்கும் இச்சூழ்நிலையில், இந்திய அரசு பாராமுகம் காட்டுவது எமக்கு ஒரு புறம் வேதனையாகவும் மறுபுறம் வேடிக்கையாகவும் இருக்கிறது" - என்று அன்ரன் பாலசிங்கம் மேலும் தெரிவித்தார். (ஐ)

## மரண அறிவித்தல்

### சின்னையா ராசதுரை

(இளைப்பாறிய எழுதுவினைஞர்)

சிறுப்பிட்டி மேற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா ராசதுரை நேற்று (21.02.2002) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - சோதிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் செல்லம்மாவின் பாசமிகு கணவரும் வைத்திலிங்கம், காலஞ்சென்ற செல்லையா, பொன்னம்பலம், தங்கம்மா, கனகம்மா (ஆசிரியை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற மயில்வாகனம், சபாரத்தினம், இராசம்மா ஆகியோரின் மைத்துனரும் குலசிங்கம் (கொழும்பு), அன்னம்மா, மனோன்மணி ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.02.2002) சனிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சிறுப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ.சபாரத்தினம்
(மைத்துனர்)

*சிறுப்பிட்டி மேற்கு,*
*நீர்வேலி.*

(1000)

# வவுனியா புளொட் முகாமில் நேற்று சூட்டுச் சம்பவம்! ஐவர் உயிரிழப்பு!!

வவுனியா,பெப்.22

வவுனியா ரம்பைக்குளத்தில் - திருமலை - ஹொரவப்பொத்தானை வீதியில் - அமைந்துள்ள புளொட் அமைப்பின் முகாமான 'மலர் மாளிகையில்' நேற்றுமாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் அந்த அமைப்பைச் சேர்ந்த நான்கு உறுப்பினர்களும் சிவிலியன் ஒருவரும் உயிரிழந்தனர்.

முகாம் பகுதியில் நேற்றுமாலை 6.30 மணியளவில் சரமாரியாக வேட்டுக்கள் தீர்க்கப்பட்ட சத்தம் கேட்டது. இதனால் அந்தப்பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

புளொட் அமைப்பைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் திடீரென சக உறுப்பினர்கள் மீது தாக்குதல் நடத்தத் தொடங்கியதாக புளொட் வட்டாரங்கள் தெரிவித்தன.

விருந்து வைபவம் ஒன்றைத் தொடர்ந்து ஏற்பட்ட உள்சண்டையின் விளைவாகவே மோதல் மூண்டதாக ஊர்ஜிதப்படுத்தப்படாத மற்றொரு தகவல் தெரிவித்தது.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்து வவுனியா மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ள புளொட் உறுப்பினரான ராமநாதன் ஞானசேகரனிடம் வவுனியா நீதிமன்ற நீதிவான் எம்.இளஞ்செழியன் நேரில் சென்று விசாரணை நடத்தினார்.

முகாமுக்கு வெளியில் இருந்து துப்பாக்கியால் சுட்டபடியே ஒருவர் முகாமுக்குள் நுழைந்ததாக ஞானசேகரன் நீதிவானிடம் அப்போது தெரிவித்தார்.

இதேவேளை, முகாமின் உட்பகுதியிலிருந்தே துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டதாக சுயாதீனச் செய்திகள் தெரிவித்தன.

இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் சத்தியா என்று அழைக்கப்படும் செந்தமிழ்ச்செல்வன், குமார் என்று அழைக்கப்படும் சதீஸ்குமார் ஆகிய புளொட் உறுப்பினர்கள் முகாமுக்குள் சூடுபட்டு இறந்து கிடந்ததாகவும் -

முகாம் வழியாக வீதியில் சென்ற ஓட்டோ சாரதியான ஆறுமுகம் சிவலிங்கம் என்ற சிவிலியன் முகாம் வாயிலில் சூடுபட்டு உயிரிழந்ததாகவும் -

கூறப்படுகிறது.

மற்றொரு புளொட் உறுப்பினரான வாசன் என்ற ஜெயச்சந்திரன், மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது முகாமிலிருந்து 20 மீற்றர்கள் தொலைவில் புனித அந்தோனியார் தேவாலயமருகே விழுந்து இறந்ததாகவும் -

தெரிவிக்கப்பட்டது.

முகாமின் பின்புறமாக நாகேந்திரன் கிருஷ்ணபிள்ளை என்ற புளொட் உறுப்பினர் இறந்து கிடந்தார். அவரது உடலில் காயங்கள் எதுவும் இருக்கவில்லை.

சம்பவம் இடம்பெற்ற முகாம் பகுதிக்கு வவுனியா நீதிவான் உடனடியாகச் சென்றார். எனினும் அமுலில் இருந்த வழக்கமான மின்தடை காரணமாக நீதிவானால் அங்குள்ள நிலைமைகளைப் பார்வையிட முடியவில்லை.

இதனையடுத்து சம்பவம் நடந்த பகுதியைச் சுற்றி பலத்த பாதுகாப்பை ஏற்பாடுசெய்யும்படியும் -

இன்று காலை 7மணிவரை அப்பகுதிக்குள் எவரையும் அனுமதிக்க வேண்டாமென்றும் -

பொலீஸாருக்கு நீதிவான் எம். இளஞ்செழியன் உத்தரவிட்டார்.

இன்று காலை 7மணிக்கு சம்பவ இடத்தை நீதிவான் பார்வையிடவுள்ளார்.

இதேவேளை -

ரம்பைக்குளம் முகாமில் ஓர் அறையில் தனிமையில் வசித்துவந்த களுவா சுதா என்ற உறுப்பினரே துப்பாக்கியை எடுத்து கண்மூடித்தனமாக வேட்டுக்களைத் தீர்த்துள்ளார் என்றும் -

மனநிலை பாதிக்கப்பட்டிருந்த அவர் பின்னர் தற்கொலை செய்து கொண்டார் என்றும் -

அவரின் சடலம் முகாமுக்கு பின்புறம் இருந்து மீட்கப்பட்டுள்ளதாகவும் -

புளொட் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே யுத்தநிறுத்த உடன்படிக்கை ஏற்பட்டிருக்கும் தருணத்தில் -

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வவுனியாவுக்கு விஜயம் செய்யவுள்ள சமயத்தில் -

நேற்று நடைபெற்ற இந்தச் சம்பவம் பலரது கவனத்தையும் ஈர்த்திருக்கிறது.

புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் நேற்றிரவு பிரதமருடன தொலைபேசிமூலம் தொடர்புகொண்டு இச்சம்பவம் தொடர்பாக நிலைமையை அவருக்கு விளக்கிக்கூறியதாக அறிய வந்தது. (ஒ-3-8-10)

## போர்நிறுத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறுத்த உடன்படிக்கை பற்றிப் பிரதமர் குறிப்பிடுகையில் அதன் உள்ளடக்கம் பற்றிய விவரங்களைத் தெரிவிக்கவில்லை. அவை இன்னும் இரண்டொரு நாள்களில் தெரியப்படுத்தப்படும் என்றார்.

எனினும் மேலோட்டமாகச் சில விஷயங்களைத் தெரிவித்தார்.

போர்நிறுத்தம், அதன் நடைமுறை, கண்காணிப்பு முதலானவை பற்றியே உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான பேச்சுக்கள் பற்றிய பேச்சும் மற்ற விஷயங்களும் பின்னர் கவனத்துக்கு எடுக்கப்படும்.

உடன்படிக்கையில் பல்வேறு விஷயங்களுக்கும் கால எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. அந்தக் கால எல்லைகளுக்குள் காரியங்கள் எப்படி நடக்கின்றன என்பது 90 நாள்கள அவதானிக்கப்படும். எல்லாம் நன்றாக இருந்தால் அடுத்த கட்டமான பேச்சு பற்றிய பேச்சுக்குப் போவோம் என்றார்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த இரு தரப்பு உடன்படிக்கை கைச்சாத்தாகி இருப்பது இரண்டு தசாப்த காலமாகத் தொடரும் உள்நாட்டுப் போருக்கு சமாதானப் பேச்சுக்கள் மூலம் தீர்வு காண்பதற்கான முயற்சிகளில் ஒரு முக்கியமான திருப்பம் என்று வர்ணிக்கப்படுகிறது. (ஐ-ஒ-3-8-10)

## விசேட ஹெலியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணியகத்தில் அரசியற்றுறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை வெஸ்பேர்க் சந்தித்துப் பேசினார்.

பின்னர் பிற்பகல் 3.45 மணிக்கு கிளிநொச்சியிலிருந்து ஹெலி மூலம் வெஸ்பேர்க் தம்பதியர் கொழும்பு திரும்பினர்.

இந்தச் சந்திப்புக் குறித்த விவரங்கள் ஓரிரு தினங்களில் வெளியாகும் என்று சு.ப.தமிழ்ச்செல்வன் பின்னர் தெரிவித்துள்ளார்.

வெஸ்பேர்க் தம்பதியரை ஏற்றிச் சென்ற ஹெலி கிளிநொச்சிப் பகுதியில் பாடசாலை மைதானம் ஒன்றில தரையிறங்கியதாகக் கூறப்படுகின்றது. இதற்கான ஏற்பாடுகள் நேற்றுக்காலை முதலே அங்கு செய்யப்பட்டிருந்தன.

தூதரை அங்கு இறக்கிவிட்டு வவுனியாவில் உள்ள விமானப்படைத் தளத்துக்குத் திரும்பிய அந்தக் ஹெலி பின்னர் மீண்டும் அங்கு சென்று அவரை ஏற்றிக்கொண்டு கொழும்பு திரும்பியதாகவும் அறியவந்தது.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதக்குள் அரச ஹெலிகொப்டர் திடீரெனத் தரையிறங்கியதால் அந்தப் பிரதேசத்தில் பொதுமக்களிடையே ஆரவாரமான ஒரு நிலைமை காணப்பட்டதாக வவுனியாவுக்குக் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

தலைவர் பிரபாகரனின் ஒப்பம் பெறப்பட்ட உடன்படிக்கையின் மூலப் பிரதியை வன்னியில் இருந்து கொழும்புக்கு எடுத்து வருவதற்காகவே தூதர் வெஸ்பேர்க் நேற்றுப் புலிகளின் பகுதிக்குச் சென்று திரும்பியதாக ஊர்ஜிதப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவித்தன.

எனினும் இது தொடர்பாக விடுதலைப் புலிகள், அரசு, நோர்வேத் தூதரகம் ஆகிய தரப்புக்களிலிருந்து எந்தத் தகவலையும் உடனடியாகப் பெற்றுக்கொள்ள முடியவில்லை.(ஒ-3-8-10)

## ரத்வத்தை கைதுக்கு பொ.ஐ.மு. கண்டனம்

கொழும்பு,பெப்.22

சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளரான அனுருத்த ரத்வத்த கைது செய்யப்பட்டது குறித்து அக்கட்சியின் பொதுச்செயலாளர் மைத்திரிபால சிறிசேன கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

கடந்த பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசின் கீழ் தாய்நாட்டுக்காக பெரும் சேவையாற்றிய இத் தேசிய வீரர் விடுதலைப் புலிகளைத் திருப்திப்படுத்தக் கைது செய்யப்பட்டுள்ளதாக அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

பொ.ஐ.முவின் இந்தக் கண்டனத்தை ஐ.தே.க. ஊடகப் பேச்சாளர் கருணாதிலக நிராகரித்துள்ளார். சட்ட மா அதிபரின் ஆலோசனையின் பேரிலேயே ரத்வத்தை கைது செய்யப்பட்டதாக அவர் தெரிவித்தார்.(ஒ)

## முல்லைக் கடற்சமரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'வருண கிரண' கடற்கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படையினர், நேற்று முற்பகல் 9.20 மணிக்கு அடையாளம் தெரியாத படகுகளின் நடமாட்டத்தை அவதானித்தனர். அந்தப்படகுகளின்மீது கடற்படையினர் தாக்குதல் மேற்கொண்டனர். அப்போது, சாலைப்பிரதேசத்திலிருந்து அங்கு வந்த விடுதலைப் புலிகளின் சில படகுகளும் கடற்படைப் படகுகள்மீது தாக்குதல் நடத்தின. இந்த மோதலில் உதவி லெப்டினனட் ஒருவர் உட்பட 3 கடற் படையினர் உயிரிழந்தனர் நால்வர் காயமடைந்தனர். அவர்கள் திரு கோணமலை மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்டனர்.

மோதல் நடந்த சமயத்தில் இரு 'கிபீர்' விமானங்களும், எம்.ஐ-24 ரக ஹெலிகளும் கடற்படையினருக்கு உதவின. விமானப்படையின் ஜெட் விமானங்கள் படகுகள் கரைசேர்ந்த பகுதிமீது தாக்குதல் நடத்தின.

இவ்வாறு களநிலைவர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

கடலில் இடம்பெற்றிருக்கும் இந்த மோதல் சம்பவம் தற்போதைய சமாதான முயற்சிகளில் எந்தவித பாதிப்பையும் ஏற்படுத்தாது என்று அரசு தெரிவித்துள்ளது.

நேற்று கொழும்பில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் பீரிஸ் இச்சம்பவம் குறித்து பிரஸ்தாபித்தார்.

இலங்கையின் கடற்பிரதேசத்தில் இடம்பெறும் எந்தவொரு நடவடிக்கை தொடர்பாகவும் விழிப்புடன் இருக்குமாறு அரசாங்கம் கடற்படையினருக்கு ஆலோசனை வழங்கியுள்ளது. அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மோதல்தவிர்ப்புக்கு அமைய அரசாங்கம் நிலப்பிரதேசங்களில் மாத்திரமே மோதலைத் தவிர்த்துக் கொள்வதற்கு இணங்கியுள்ளது என பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். (ஐ-ஒ-3-8-10)

## தாக்குதல்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெறுவதாக விடுதலைப் புலிகளிடமிருந்து தமக்கு தகவல் கிடைத்ததாகவும் -

அந்தத் தகவலை தான் உடனடியாகவே பிரதமருக்கு தெரியப்படுத்தியதையடுத்து பிரதமர் படைத் தளபதிகளுடன் தொடர்புகொண்டு அதனை நிறுத்துமாறு உத்தரவிட்டதாகவும் -

அமைச்சர் மகேஸ்வரன் தெரிவித்தார். (ஐ-3)

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படையினருக்கான விசேட உரையை நிகழ்த்துவார். அதற்கு முன்பாக வுநகரத்தையில் பயணிகள் போக்குவரத்தைப் பிரதமர் பார்வையிடுவார்.

பிரதமருடன் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன மற்றும் அமைச்சர்களான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், மிலிந்த மொறகொட, ஜயலத் ஜயவர்த்தனா ஆகியோரும் செல்கின்றனர்.


## கிறிஸ்தவ சமய சமூக ஆய்வு மன்றம்

திருநெல்வேலி C.I.S.R.S.

### கருத்தரங்கு பிற்போடப்பட்டுள்ளது

கிறிஸ்தவ சமய சமூக ஆய்வு மன்றத்தினால் 21.01.02இல் நடத்தப்படவிருந்த **"இலங்கையில் கல்வி முறையும் வேலை வாய்ப்புகளும்"** என்ற கருத்தரங்கு தவிர்க்கமுடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

(976) - C.I.S.R.S. நிறுவனத்தினர்.

## நவீன கணனிகள் விற்பனையில்




**Pentium 4 (1.6,1.7 GHz)**
**PentiumIII 933, 1000 MHz**

PRINTERS : EPSON LQ 300+ , EPSON LX 300+ HP 1200 LASER , HP 640C,
SCANNER : HP 3300, ACER UPS : APC 500VA

தரமான கணனிகளையும் கணனி உதிரிப்பாகங்களையும் நியாயமான விலையில், உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளக் கூடிய ஒரே ஒரு நிறுவனம் IIS

IIS விற்பனைப் பிரிவு,
100, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
TP. No : 2831



எங்கள் மனங்களில்
இன்னமும் வடுக்கள்.....

A Lecture & Discussion
on

**Healing the Psyche for Peace**

by
**Dr. David N.Ratnavale**
*Consultant*
*Human Disaster Management Council*

23.02.2002
Saturday
3.00- 5.00 p.m.

Library Auditorium
University of Jaffna

ஆர்வலர்கள்
அனைவரையும் அன்புடன்
அழைக்கின்றோம்

Shanthiham &

Department of Psychiatry

(C/20829)


# மரண அறிவித்தல்கள்

## கிறிஸ்ரி நல்லையா செல்வரட்ணம்

**(கௌரவ செயலாளர், CSI ஆலயம், தெல்லிப்பழை)**

ஈவினையை பிறப்பிடமாகவும், உடுவிலை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட C.N.செல்வரட்ணம் நேற்று (21.02.2002) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி S.V.நல்லையா தம்பதிகளின் மகனும், திருமதி ஐறீன் தேவமலர் (தேவி ரீச்சர், யூனியன் கல்லூரி முன்னாள் ஆசிரியர்) அவர்களது அன்புக் கணவரும் திருமதி புஸ்பராணி பரமநாதன் (லண்டன்), N.தங்கத்துரை, N.அரியரட்ணம் (கிளிநொச்சி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், திருமதி றோஸ் தேவநேசம் நைல்ஸ், Dr.போல் துரைசிங்கம் (லண்டன்), அருட்திரு D.C.இரட்ணசிங்கம் (தென்னிந்திய திருச்சபை), திருமதி லில்லி அன்னமலர், கிருபைராஜா, செல்லையா, காலஞ்சென்ற பரமநாதன், திருமதி தங்கமலர் தங்கத்துரை, திருமதி வள்ளிநாயகி அரியரட்ணம் ஆகியோரின மைத்துனருமாவார்.

அன்னாரின் நல்லடக்க வழிபாடு அவரது இல்லத்தில் இன்று (22.02.2002) வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு (S.L.T.) நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக உடுவில் தென்னிந்தியத் திருச்சபை சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், சபை மக்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:

*முதலாம் மைல் கல்,*
*மானிப்பாய் வீதி,*
*உடுவில்*

அருட்திரு.M.யூட் சுதர்சன்
(சபைக்குரு C.S.I.ஆலயம்,
தெல்லிப்பழை)

(992)

நயினாதீவு

## கந்தசாமி மகாலிங்கம்

**(நமசிவாய அடியான்)**

19.02.2002 அன்று கொக்குவிலில் காலமான அமரர் கந்தசாமி மகாலிங்கம் (நமசிவாய அடியான்) அவர்களின் இறுதிக்கிரியைகள் நாளை 23.02.2002 சனிக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

*திருமதி மகாலிங்கம்,*
*சகோதரர்:- பரமலிங்கம்,*
*22/1,புகையிரத நிலைய வீதி,*
*கொக்குவில்.*

*பிள்ளைகள்:* ஞானசம்பந்தன், பார்த்தீபன், பிரதீபன், ஜெகதீபன், காயத்திரி, கார்த்திகாயினி.

(989)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.02.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.